ஆரம்பக்கல்வி



தாய்மொழி

தரம் 04,05 மாணவர்களுக்கான தாய்மொழி
பாடமும் பயிற்சியும்

ஆக்கம் - R.நிரோஜ்
(இர/பலா/பின்னவலை த.ம.வி)

0771766376
nirojh31@gmail.com

www.ikeau.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.teachmore.lk

www.teachmore.lk

ஆசிரியரிடமிருந்து :

இக்கையேடானது, தரம் 04,05 இல் கல்வி பயிலும் மாணவர்களின் மொழி அறிவினை விருத்தி செய்யும் நோக்கத்துடனும், தரம் 05 இல் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற புலமைப்பரிசில் பரீட்சையின் தமிழ் பகுதிக்கு இலகுவான முறையில் விடையளிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் சுயமாக படித்து தெளிவு பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தரம் 04,05 தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டியின் சகல பயிற்சிகளும் இணைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் இதனை முறையாகப் பயன்படுத்தி தெளிவு பெறுவீர்களாக.

www.lkedu.lk

www.teachmore.lk


இதனைப் பிரதி எடுக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் உரிமையைக் கடைப்பிடிக்கவும். ஏதேனும் குறைகள், வழுக்கள் இருப்பின் என்னைத் தொடர்பு கொண்டு சுட்டிக்காட்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளடக்கம்..

- தமிழ் எழுத்துக்கள்
- திணை
- பால்
- எண்
- இடம்
- காலம்
- பெயர்ச்சொல்
- வினைச்சொல்
- வாக்கிய உறுப்புகள்
- அடைமொழிகள்
- உயிர்க்குறிகள்
- நிறுத்தக்குறிகள்
- பழமொழிகள்
- ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
- ஒத்தக்கருத்துச் சொற்கள்
- எதிர்க்கருத்துச் சொற்கள்
- எதிர்ப்பாற் சொற்கள்
- மரபுப்பெயர்கள்
- தொடர்மொழிக்கு ஒரு மொழி
- சுருக்கக் குறியீடுகள், விழாக்கள்
- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள்
- சேர்த்து எழுதுதல்
- பிரித்து எழுதுதல்
- தரம் 04 ஆசிரியர் வழிகாட்டிப் பயிற்சிகள்
- தரம் 05 ஆசிரியர் வழிகாட்டிப் பயிற்சிகள்
- ஏனைய பயிற்சிகள்

www.lkedu.lk

தமிழ் எழுத்துக்கள்



	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஆய்த எழுத்து

www.ikeou.lk

தமிழில் உள்ள எழுத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

உயிர் எழுத்துக்கள்	- 12
மெய் எழுத்துக்கள்	- 18
உயிர் மெய் எழுத்துக்கள்	- 216
ஆய்த எழுத்து	- 01
மொத்த எழுத்துக்கள்	- 247

உயிர் எழுத்துக்கள் - 12

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ

உயிர்க் குறில் எழுத்துக்கள் / குற்றெழுத்துக்கள் - 05

உயிரெழுத்துக்களில் குறுகிய ஓசை உடைய எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் எனப்படும்.

அ	இ	உ	எ	ஒ

உயிர் நெட்டெழுத்துக்கள் - 07

உயிரெழுத்துக்களில் நீண்ட ஓசை உடைய எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

மெய் எழுத்துக்கள் - 18

க்	ங்	ச்	ஞ்	ட்	ண்	த்	ந்	ப்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்	ற்	ன்

மெய் எழுத்துக்கள் மூன்று வகைப்படும்

- வல்லினம் - 06

க்	ச்	ட்	த்	ப்	ற்

- மெல்லினம் - 06

ங்	ஞ்	ண்	ந்	ம்	ன்

- இடையினம் - 06

ய்	ர்	ல்	வ்	ழ்	ள்

உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18 இவை இரண்டும் சேர்ந்து முதல் எழுத்துக்கள் எனப்படும்.

முதல் எழுத்துக்கள் - 30 ஆகும்.

உயிர் மெய் எழுத்துக்கள் - 216


ஒரு மெய்யெழுத்துடன் ஓர் உயிரெழுத்து சேர்வதால் உயிர் மெய் எழுத்து உருவாகிறது.

உயிரெழுத்துக்கள் (12) * மெய்யெழுத்துக்கள் (18) = 216

www.lkedu.lk

www.teachmore.lk

எடுத்துக்காட்டு :



ஆய்த எழுத்து – 01



உயிர் மெய் எழுத்துக்கள் 216, ஆய்த எழுத்து 01 இவை இரண்டும் சேர்ந்து சார்பு எழுத்துக்கள் எனப்படும்.

சார்பு எழுத்துக்கள் - 217 ஆகும்.

www.lkedu.lk

www.teachmore.lk

திணை

திணை என்பது வகுப்பு அல்லது பிரிவு எனப் பொருள்படும். திணை இரு வகைப்படும். அவையாவன

1. உயர்திணை
2. அ்றிணை

உயர்திணை

உயர்திணையில் உயிருள்ளதும், பகுத்தறிவு உடையவரும் உள்ளடங்குவர்.
எடுத்துக்காட்டு - இறைவன், மக்கள், தேவர், நரகர், அசுரர் எனப்படுவோர்.

அ்றிணை

அ்றிணையில் பகுத்தறிவற்ற உயிருள்ளவைகளும் உயிரற்ற பொருட்களும் அடங்கும். பிராணிகளையும், தாவரங்களையும், ஏனைய பொருட்களையும் உள்ளடக்கலாம்.

எடுத்துக்காட்டு – யானை, புத்தகம், மேசை, புகையிரதம், மரம் போன்றன.

உயர்திணை	அ்றிணை
அமலன்	அது
அதிபர்	அவை
அவன்	கடல்
அவர்கள்	சூரியன்
படித்தான்	பூக்கள்
பாடினாள்	மா
நடந்தார்கள்	எருது
வைத்தியர்	பட்டம்
மகன்	தட்டு
பாடகன்	பணம்
வீரன்	பேனை
ஒற்றன்	தொலைபேசி
நண்பன்	சாப்பிட்டது
சிவன்	பறக்கும்
பாபு	நீந்தியது
குழந்தை	கப்பல்
நீதிபதி	விமானம்

www.lkedu.lk

பால்

பால் என்றால் பிரிவு என்று பொருள்படும். உலகிலுள்ள அனைத்து பொருட்களையும் திணை அடிப்படையில் பால்களாக பிரிக்கலாம். அவையாவன,

உயர்திணை


- **ஆண்பால்**
- **பெண்பால்**
- **பலர்பால்**

  மேலுள்ள அனைத்தும் உயர்திணைக்குரிய பால்களாகும்.

அ.்றிணை

- **ஒன்றன்பால்**
- **பலவின்பால்**

  மேலுள்ள இரண்டும் அ.்றிணைக்குரிய பால்களாகும்.



www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- **ஆண்பால்**

உயர்திணைக்குள் அடங்கும் ஆண்களின் ஒருமையைக் குறிக்கும்.
எடுத்துக்காட்டு – ஆசிரியன், சங்கரன், மாணவன், மாமா, திருடன், காவலன்

- **பெண்பால்**

உயர்திணையில் அடங்கும் பெண்களின் ஒருமையைக் குறிக்கும்.
எடுத்துக்காட்டு – ஆசிரியை, பாத்திமா, அம்மா, அரசி, இறைவி, தங்கை.

- **பலர்பால்**

உயர்திணையைச் சேர்ந்த எல்லாப் பன்மைச் சொற்களும் இதற்குள் அடங்கும்.
எடுத்துக்காட்டு – மக்கள், ஆண்கள், பெண்கள், தேவர்கள்.

(ஆண்கள் - இச்சொல் ஆண்களில் பலரைக் குறிக்கின்றது.)

(பெண்கள் - இச்சொல் பெண்களில் பலரைக் குறிக்கின்றது.)

- **ஒன்றன்பால்**

அ.ஃறிணைப் பொருட்களில் ஒருமையைக் குறிப்பது ஒன்றன் பால் ஆகும்.
எடுத்துக்காட்டு – அது, குருவி, வீடு, கதிரை, மயில், கிளி.

- **பலவின்பால்**

அ.ஃறிணைப் பொருட்களில் பன்மையைக் குறிப்பது பலவின் பால் ஆகும்.
எடுத்துக்காட்டு – அவை, பூக்கள், வீடுகள், கதிரைகள், புத்தகங்கள்.

குறிப்பு - இருபால் பொதுப்பெயர்

ஆண்பால் பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இருபால் பொதுப்பெயர்கள் எனப்படும்.

எடுத்துக்காட்டு – கவிஞர், அதிபர், நீதிபதி, முகாமையாளர், பிரதமர், சனாதிபதி.

www.lkedu.lk

எண்

பொருட்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். எண் இரண்டு வகைப்படும்.

1. ஒருமை
2. பன்மை

- ஒருமை

ஏதேனும் ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும். ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்பன ஒருமைக்குரிய பால்களாகும்.

எடுத்துக்காட்டு –

1. ஆண்பால் - அவன், நண்பன், பாலன், கர்ணன், திருடன்.
2. பெண்பால் - அவள், பாடகி, தோழி, அம்மா, கமலா.
3. ஒன்றன்பால் - அது, புத்தகம், பூ, பந்து, கதவு, மீன்.

- பன்மை

பல பொருட்களைக் குறிப்பது பன்மை ஆகும். பலர்பால், பலவின்பால் என்பன இதற்குள் அடங்கும்.

எடுத்துக்காட்டு –

1. பலர்பால் - அவர்கள், ஆண்கள், பெண்கள், மாணவர்கள், நண்பர்கள்.
2. பலவின்பால் - அவை, பறவைகள, விரல்கள், பூக்கள், பழங்கள்.

ஒருமை			பன்மை	
ஆண்பால்	பெண்பால்	ஒன்றன்பால்	பலர்பால்	பலவின்பால்
நண்பன்	சிறுமி	மீன்	ஓவியர்கள்	சட்டிகள்
சீடன்	பாற்காரி	புறா	வைத்தியர்கள்	ஆடுகள்
ஆதவன்	சங்கரி	வீடு	விவசாயிகள்	விதைகள்

www.lkedu.lk

இடம்

நாம் உரையாடும் போது பேசுபவர், கேட்பவர், பேசப்படும் பொருள் என்று மூன்று நிலைகள் உள்ளன. அம்மூன்று நிலைகளையும் சுட்டிக் காட்டுவது இடம் எனப்படும்.

இடம் மூன்று வகைப்படும். எனவே இதனை **மூவிடம்** என்று கூறுவர். அவையாவன,

1. **தன்மை**
2. **முன்னிலை**
3. **படர்க்கை**

• தன்மை

பேசுபவர் தன்னைப் பற்றிக் குறிப்பது தன்மை எனப்படும்.
எடுத்துக்காட்டு – (நான், நாங்கள், நாம்)

- **நான்** சாப்பிட்டேன்.
- **நாங்கள்** பேசினோம்.
- **நாம்** படிப்போம்.

• முன்னிலை

முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை எனப்படும்.
எடுத்துக்காட்டு – (நீ, நீங்கள்)

- **நீ** பாடினாய்.
- **நீங்கள்** வந்தீர்கள்.

• படர்க்கை

தன்னையும் முன்னிலையும் அல்லாத நம்மால் பேசப்படுகின்ற ஏனையவர்களையும் ஏனைய பொருட்களையும் குறிக்கும்.
எடுத்துக்காட்டு – (அவன், அவர், அவள், அது, அவை)

- **அவன்** வந்தான்.
- **அவர்** சாப்பிட்டார்.
- **அது** பறந்தது.
- **அவை** நடந்தன.

www.lkedu.lk

தன்மை	முன்னிலை	படர்க்கை
நான்	நீ	அவன், அவள்
யான்	நீர்	அது, அவை
நாம்	நீவிர்	அவர், அவர்கள்
யாம்	நீங்கள்	மரம், காடு, கிளி
நாங்கள்	நீயிர்	கமலா, குமார்
		பிரவீன்,

காலம்

செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகையால் செயலுக்குரிய காலத்தைக் காட்டுவது வினைச்சொல்லேயாகும். பெயர்ச்சொல் காலம் காட்டாது.

காலத்தின் வகைகள்

1. இறந்தகாலம்
2. நிகழ்காலம்
3. எதிர்காலம்

• இறந்தகாலம்

செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிக்கும் காலம் இறந்த காலமாகும்.
எடுத்துக்காட்டு – பாடினான், ஓடினான், ஆடினாள், சென்றது, ஓடியது, நடந்தான்.

• நிகழ்காலம்

செயல் தொடங்கி முற்றுப் பெறாத நிலை நிகழ் காலம் ஆகும். செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது இதன் பொருளாகும்.
எடுத்துக்காட்டு – உண்கின்றான், விளையாடுகின்றார்கள், பறக்கிறது, நடக்கின்றன.

• எதிர்காலம்

செயல் தொடங்கப்பெறாத நிலை எதிர்காலம் எனப்படும். செயல் இனிமேல் நடைபெற உள்ளது எனச் சுட்டுவது இதன் பொருள்.
எடுத்துக்காட்டு – விளையாடுவார்கள், பறக்கும், சாப்பிடும், ஓடும்.

www.lkeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

எடுத்துக்காட்டு

வினைச்சொல்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
இரு	இருந்தான்	இருக்கின்றான்	இருப்பான்
எடு	எடுத்தான்	எடுக்கின்றான்	எடுப்பான்
உண்	உண்டான்	உண்கின்றான்	உண்பான்
தா	தந்தான்	தருகின்றான்	தருவான்
நட	நடந்தான்	நடக்கின்றான்	நடப்பான்

பயிற்சிகள்

- **பின்வரும் அட்டவணையை நிரப்புக.**

உயர்திணை	அ.்.றிணை
1……	……..
2……	……
3……..	……..
4……..	…….
5…….	…….
6…….	…….
7…….	…….
8…….	…….
9……	……..
10……..	…….

- **பின்வரும் சொற்களை வகைப்படுத்துக.**

சங்கரி, பாட்டி, பிள்ளைகள், விவசாயிகள், தாதிகள், நண்பர்கள், பெண்கள், ஆண்கள், தாத்தா, மாமி, அண்ணன், சேவகன், அரசன, ஓவியர்கள், பாற்காரி, நந்தினி, சிறுமி, கீதன், வைத்தியர்கள, தமிழரசி, பாடகன், தபாற்காரர், தம்பி, திருடன், பாடுகிறாள், வந்தார்கள், மாணவர்கள், அவர்கள், ஆசிரியன், மாணவன்.

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்

- தரம் - 04 "**புதியதோர் உலகம்**" என்னும் பாடத்தைக் கொண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புக. (பாடநூல் பக்கம் 12)

ஒன்றன்பால்	பலவின்பால்

www.lkedu.lk

www.teachmore.lk

- பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாகவும், பெண்பால் வாக்கியங்களை ஆண்பால் வாக்கியங்களாகவும் மாற்றுக.

1. அவன் பாடம் படித்தான்.

   ……..

2. மாமா வீட்டிற்கு வந்தார்.

   ……

3. பாற்காரி சந்தைக்குச் சென்றாள்.

   ……

4. உழவன் வயலை உழுதான்.

   ……

5. அரசி நாட்டை ஆண்டாள்.

   ……

6. ஆசிரியை மாணவத் தலைவியை தெரிவு செய்தார்.

   ……

7. வேடன் காட்டில் வசித்தான்.

   ……..

8. தம்பி பட்டம் செய்தான்.

   ……

9. பெரியம்மா வீட்டிற்கு வந்தார்.

   ……

10. தலைவி மேடையில் பேசினாள்.

    ……

11. சிறுவன் பரிசு பெறுவானா?

    ……

12. புதல்வனும் அவனது நண்பனும் விளையாடினார்கள்.

    ……

13. கணவன் வீட்டு வேலைகளைச் செய்தான்.

    ……

14. சேவகன் நாளை வருவான்.

    ……

15. ஆண்கள் கூட்டமாக சென்றார்கள்.

    ……..

www.lkedu.lk

- **பின்வரும் அட்டவணையை நிரப்புக.**
  (தரம் 05 தாய்மொழி ஆ.அ.வ பக்கம் 60)

எழுவாய் பெயர்ச்சொல்	பயனிலை – வினைச்சொல்		
	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
தன்மை இடம்			
ஒருமை - நான்	நடந்தேன்	நடக்கிறேன்	நடப்பேன்
பன்மை - நாம்			
முன்னிலை இடம்			
ஒருமை - நீ			
பன்மை-நீங்கள்			
படர்க்கை இடம்			
ஆண்- அவன்			
பெண்- அவள்			
பலர்- அவர்			
ஒன்று- அது			
பல- அவை			

- **பின்வரும் பன்மை சொற்களை ஒருமை சொற்களாக்குக.**

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
	உழவர்கள்		சென்றோம்
	நகரங்கள்		கவிஞர்கள்
	முட்கள்		பற்கள்
	வாடின		பறக்கின்றன
	மலர்ந்தன		சாப்பிட்டான்

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- **தரப்பட்ட வாக்கியத்தைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

1. அப்பா அறிவுரை கூறுகின்றார்.



திணை - .....
பால் - .....
எண் - .....
இடம் - .....
காலம் - .....

2. பசுக்கள் புல் மேய்ந்தன.



திணை - .....
பால் - .....
எண் - .....
இடம் - .....
காலம் - .....

3. பறவைகள் வானில் பறக்கின்றன.



திணை - .....
பால் - .....
எண் - .....
இடம் - .....
காலம் - .....

www.lkedu.lk

4. ஆசிரியை பாடல் பாடுவாள்.



திணை - .....

பால் - .....

எண் - .....

இடம் - .....

காலம் - .....

5. அம்மா குழந்தையை உறங்க வைக்கின்றாள்.



திணை - .....

பால் - .....

எண் - .....

இடம் - .....

காலம் - .....

6. நானும் தங்கையும் பாடசாலை செல்கின்றோம்.



திணை - .....

பால் - .....

எண் - .....

இடம் - .....

காலம் - .....

www.lkedu.lk

- **கட்டங்களில் உள்ள சொற்களை மூன்று காலங்களையும் குறிக்கும் வகையில் வாக்கியங்களாக மாற்றுக.**

எடுத்துக்காட்டு - **படி**

- நான் பாடம் படித்தேன். (இறந்தகாலம்)
- நான் பாடம் படிக்கின்றேன். (நிகழ்காலம்)
- நான் பாடம் படிப்பேன். (எதிர்காலம்)

1. **பாடு**
   ……
   ……
   ……

2. **நட**
   ……
   ……
   ……

3. **ஓடு**
   ……..
   ……..
   ……..

4. **எடு**
   ……
   ……
   ……

5. **உண்**
   ……..
   ……
   ……

www.lkedu.lk

www.teachmore.lk

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல்லை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,

1. பொருட்பெயர்

2. இடப்பெயர்

3. காலப்பெயர்

4. சினைப்பெயர்

5. குணப்பெயர்

6. தொழிற்பெயர்

- **பொருட்பெயர்**

உயிருள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும். (இதில் உயர்திணைக்குரிய பொருள்களும், அ்.றிணைக்குரிய பொருள்களும் அடங்கும்.)

எடுத்துக்காட்டு :

ரகு, கணினி, கிளி, யானை, கதிரை, கமலா, கப்பல், மரம், பட்டம், நிலா, பாட்டி

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

• இடப்பெயர்

ஏதேனும் ஒரு இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும். ஊர்களின் பெயர்களும் ஊரில் உள்ள நிலப்பிரிவுகளின் பெயர்களும் இதில் உள்ளடங்கும்.

எடுத்துக்காட்டு :

இலங்கை, இந்தியா, பாடசாலை, மைதானம், வீடு, வைத்தியசாலை, கண்டி, கொழும்பு, நூலகம், வயல், காடு, சந்தை

• காலப்பெயர்

ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு :

திங்கட்கிழமை, வாரம், வருடம், மாதம், சித்திரை, காலை, இரவு, நாள், நிமிடம், நேற்று, மாரி, கோடை

• சினைப்பெயர்

ஏதாவது ஒரு பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயராகும். (சினை என்றால் உறுப்பு என்று பொருள்) உயர்திணைப் பொருள்களின் உறுப்புக்களையும் அ.்றிணைப் பொருள்களின் உறுப்புக்களையும் இது குறிக்கும்.

எடுத்துக்காட்டு :

தண்டு, இலை, பூ, விரல், நகம், தலை, கண், சொண்டு, வால், இதழ், செட்டை, சிறகு

• குணப்பெயர்/பண்புப்பெயர்

ஒரு பொருளின் குணத்தை உணர்த்தும் பெயர் குணப்பெயர் எனப்படும். நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் குணப்பெயர் வரும்.

எடுத்துக்காட்டு :

புளிப்பு, இனிப்பு, வட்டம், வெள்ளை, மஞ்சள், சதுரம், உயரம், கோபம், அன்பு, கருமை, வெண்மை, சிரிப்பு

www.lkedu.lk

- **தொழிற்பெயர்**

ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்தும் (தொழிலின் பெயராக வரும்) பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு :

படித்தல், ஓடுதல், ஆடுதல், பாடுதல், விளையாடுதல், நீந்துதல், உண்ணுதல், குளித்தல், வரைதல்

குறிப்பு :

பெயர்ச்சொல்லானது திணை, பால், எண், இடம் என்பவற்றைக் காட்டும். **(ஆனால் காலத்தைக் காட்டாது.)**

எடுத்துக்காட்டு :

பெயர்ச்சொற்கள்	திணை	பால்	எண்	இடம்
அவன், அண்ணா	உயர்திணை	ஆண்பால்	ஒருமை	படர்க்கை
அவள், தங்கை	உயர்திணை	பெண்பால்	ஒருமை	படர்க்கை
அது, சிங்கம்	அ.்றிணை	ஒன்றன்பால்	ஒருமை	படர்க்கை

வினைச்சொல்

ஒரு பொருளின் அசைவை அல்லது செய்கையை அல்லது தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்லாகும்.

வினைச்சொல்லின் சிறப்பியல்பு காலத்தைக் காட்டுவதாகும்.

எடுத்துக்காட்டு : மீன் நீரில் **நீந்தியது.**

இவ்வாக்கியத்தில் **'நீந்தியது'** என்னும் சொல் வினைச்சொல்லாகும். இது இறந்த காலத்தினை குறித்து நிற்கின்றது. (ஆனால் மீன் என்னும் பெயர்ச்சொல் காலத்தைக் காட்டுவதில்லை.)

www.lkedu.lk

மேலும் சில எடுத்துக்காட்டுகள் :

வாக்கியம்	பெயர்ச்சொல்	வினைச்சொல்
பழம் விழுந்தது.	பழம்	விழுந்தது
முயல் துள்ளி ஓடியது.	முயல்	ஓடியது
கொடி பறந்தது.	கோடி	பறந்தது
மாணவன் படித்தான்.	மாணவன்	படித்தான்
யானை நடந்தது.	யானை	நடந்தது

குறிப்பு : ஒவ்வொரு பெயர்ச்சொல்லும் ஏதாவது ஒரு பாலினுள் உள்ளடங்குவதைப் போலவே பயனிலையாக வரும் வினைச்சொல்லும் ஏதாவது ஒரு பாலினுள் உள்ளடங்கும்.

பெயர்	வினை	பால்
அவன்	வருகிறான்	ஆண்பால்
அவள்	வருகிறாள்	பெண்பால்
அவர்கள்	வருகிறார்கள்	பலர்பால்
அது	வருகிறது	ஒன்றன்பால்
அவை, அவைகள்	வருகின்றன	பலவின்பால்

வினைச்சொற்கள் பால், காலம் அடிப்படையில்

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்	காலம்
ஓடினான்	ஓடினாள்	ஓடினார்கள்	ஓடியது	ஓடின	**இறந்தகாலம்**
ஓடுகிறான்	ஓடுகிறாள்	ஓடுகிறார்கள்	ஓடுகிறது	ஓடுகின்றன	**நிகழ்காலம்**
ஓடுவான்	ஓடுவாள்	ஓடுவார்கள்	ஓடும்	ஓடும்	**எதிர்காலம்**

www.ikedu.lk

www.teachmore.lk

நினைவில் கொள்வோம் :

- பெயர்சொல் காலம் காட்டுவதில்லை.
- வினைச்சொல் காலம் காட்டும்.
- பெயர்ச்சொல், வினைச்சொல் இரண்டும் ஐந்து பால்களில் ஏதாவது ஒன்றினுள் உள்ளடங்கும்.

வாக்கிய உறுப்புகள்

ஏதாவது ஒரு கருத்தை முழுமையாக உணர்த்தும் சொற்தொடர் வாக்கியம் எனப்படும். வாக்கியத்தில் முக்கியமான மூன்று உறுப்புகள் உள்ளன.

எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்

- ஒரு வாக்கியத்தை பயனிலை இன்றி அமைக்க முடியாது.
- யார்?, எது?, எவை? என்னும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடை **எழுவாய்.**
- எழுவாயின் செயலை விளக்குவது **பயனிலை.**
- யாரை?, எதை?, எவற்றை? என்னும் கேள்விகளுக்கு கிடைக்கும் விடை **செயப்படுபொருள்.**

எடுத்துக்காட்டு :

தீபா முயலை வளர்த்தாள்.

- எழுவாய் - யார்? – தீபா
- பயனிலை – என்ன செயல் நடைபெற்றது? – வளர்த்தாள்
- செயப்படுபொருள் - எதை? – முயலை

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.teachmore.lk

எழுவாய்

எழுவாய் என்பது ஒரு வாக்கியத்தில் கருத்து எழுவதற்கு இடமாக அமையும் சொல்லாகும். எழுவாயைக் காண பின்வரும் வினாக்களை வினவலாம்.

- உயர்திணை எனின் : **யார்?**
- அ.்றிணை ஒருமை எனின் : **எது?**
- அ.்றிணை பன்மை எனின் : **எவை?**

எடுத்துக்காட்டு : மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.

எழுவாய் - யார் படித்தனர்? – மாணவர்கள்

பயனிலை

பயனிலை என்பது ஒரு வாக்கியத்தில் கருத்து முற்றுப் பெறும் இடமாகவும், எழுவாயின் பயனை தன்னகத்தே கொண்டதாகவும் அமைந்திருக்கும். பயனிலை சொல் எப்போதும் **முற்றுவினைச்** சொல்லாக அமைந்திருக்கும். பயனிலை சொல்லைக் காண்பது இலகுவாக இருப்பதால் எவ்வினாக்களும் வினவப்படுவதில்லை.

எடுத்துக்காட்டு : மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.

பயனிலை – முற்றுவினைச் சொல் - படித்தனர்

செயப்படுபொருள்

செயப்படுபொருள் என்பது செயப்படுவதற்கு உரியதாக உள்ள பொருள் எனலாம். எல்லா வாக்கியங்களும் செயப்படுபொருள் கொண்ட வாக்கியங்களாக அமைவதில்லை. பின்வரும் வினாக்கள் மூலம் செயப்படுபொருளை அறியலாம்.

- உயர்திணை எனின் - **யாரை?**
- அ.்றிணை ஒருமை எனின் - **எதை?**
- அ.்றிணை பன்மை எனின் - **எவற்றை?**

எடுத்துக்காட்டு : மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.

செயப்படுபொருள் - எதை? – பாடத்தை

www.teachmore.lk

எடுத்துக்காட்டுகள் :

1. பசு பாலைத் தரும்.
- எழுவாய் : பசு
- பயனிலை : தரும்
- செயப்படுபொருள் : பாலை

2. பாபு கடிதம் எழுதினான்.
- எழுவாய் : பாபு
- பயனிலை : எழுதினான்
- செயப்படுபொருள் : கடிதம்

3. ஓவியன் படம் வரைந்தான்.
- எழுவாய் : ஓவியன்
- பயனிலை : வரைந்தான்
- செயப்படுபொருள் : படம்

4. நான் பத்திரிகை வாசித்தேன்.
- எழுவாய் : நான்
- பயனிலை : வாசித்தேன்
- செயப்படுபொருள் : பத்திரிகை

5. உழவன் வயலை உழுதான்.
- எழுவாய் : உழவன்
- பயனிலை : உழுதான்
- செயப்படுபொருள் : வயலை

www.lkedu.lk

அடைமொழிகள்

ஒரு சொல்லைச் சிறப்பித்துக் கூற பயன்படுத்தப்படுவது அடைமொழியாகும்.

(மாணவர்கள் வாக்கிய உறுப்புகள் தொடர்பாக கற்ற விடயங்களை நினைவு படுத்திக் கொள்வது சிறப்பானது)

எழுவாய் அடைமொழி

எழுவாய் அடைமொழி என்பது ஒரு வாக்கியத்தின் எழுவாயைச் சிறப்பித்து வரும் சொல்லாகும்.

எடுத்துக்காட்டு : **வெள்ளை** முயல் துள்ளி ஓடியது.

இவ்வாக்கியத்தின் எழுவாய்ச் சொல்லான முயல் என்பது **வெள்ளை** முயல் என சிறப்பிக்கப்படுவதால், **வெள்ளை என்ற சொல் எழுவாய் அடைமொழியாகும்.**

பயனிலை அடைமொழி

பயனிலை அடைமொழி என்பது ஒரு வாக்கியத்தின் பயனிலையைச் சிறப்பித்து வரும் சொல்லாகும்.

எடுத்துக்காட்டு : பறவைகள் **கூட்டமாகப்** பறந்தன.

இவ்வாக்கியத்தின் பயனிலைச் சொல்லான பறந்தன என்பது **கூட்டமாகப்** பறந்தன என்று சிறப்பிக்கப்படுவதால், **கூட்டமாக என்ற சொல் பயனிலை அடைமொழியாகும்.**

குறிப்பு :

செயப்படுபொருள் உள்ள வாக்கியத்தில் செயப்படுபொருளை சிறப்பித்துக் காட்ட பயன்படும் சொல் **செயப்படுபொருள் அடைமொழியாகும்.**

எடுத்துக்காட்டு : கிளி **கனிந்த** பழத்தைக் கொத்தியது.

இங்கு **கனிந்த** என்ற சொல் **செயப்படுபொருள் அடைமொழியாகும்.**

www.lkedu.lk

பயிற்சிகள் (முழுமையாக பாடத்திட்டத்தையும் ஆசிரியர் வழிகாட்டியையும் அடிப்படையாகக் கொண்டது)

- **அட்டவணைக்கேற்ப பெயர்ச்சொற்களை வேறுபடுத்தி எழுதுக.**

கரம், வட்டம், ஓடுதல், விழி, இனிப்பு, நிமிடம், பாடசாலை, கோடை, தபாலகம், மரம், மார்கழி, காடு, குமார், மாதம், கோழி, சதுரம், கோபம், கப்பல், கதிரை, மைதானம், நீந்துதல், அன்பு, சொண்டு, படித்தல், இறகு, சித்திரை, ஆதவன், கீதா, புத்தகம், கோயில், மாரி, இலை, வெள்ளை, ஆடுதல்.

பொருட்பெயர்	இடப்பெயர்	காலப்பெயர்	சினைப்பெயர்	குணப்பெயர்	தொழிற்பெயர்

- **கீழே தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களின் வகைகளை எழுதுங்கள்**

1. கண், கிளை, இலை : .....
2. சிங்கம், கதிரை, பந்து : .....
3. பாடுதல், ஓடுதல், படித்தல் : .....
4. சித்திரை, காலை, புதன்கிழமை : .....
5. கண்டி, கனடா, கீரிமலை : .....
6. பசுமை, அன்பு, நீலம் : .....

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

- **பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் இனம்கண்டு எழுதுங்கள்.**

1. தம்பியும் தங்கையும் கடைக்குப் போனார்கள்.
   ……
   ……
2. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தனர்.
   ……
   ……
3. கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது.
   ……
   ……
4. முபாரக் வேலைத் தேடி கொழும்புக்குச் சென்றார்.
   ……
   ……
5. நிலத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்துக் கொத்தினான்.
   ……
   ……
6. பறவைகள் இரைத் தேடிப் பறந்து சென்றன.
   ……
   ……
7. சிறுமி பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தாள்.
   ……
   ……
8. பட்டம் வானில் உயரமாகப் பறந்தது.
   ……
   ……
9. இன்றும் நாளையும் பாடசாலை விடுமுறை என அறிவிக்கப்பட்டது.
   ……
   ……
10. சிறுவன் சிவப்பு, மஞ்சள், பச்சை நிறப் பந்துகளை வாங்கினான்.
    ……
    ……

www.lkedu.lk

- **பின்வரும் சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல் என வேறுபடுத்துக.**

கணினி, பறவை, தொலைபேசி, பாடும், ஆடும், ஓடியது, கதிரை, உடைந்தது, வெள்ளை, படித்தான், வருடம், பறந்தன, பெய்தது, புத்தகம், படகு, அடித்தான், நடந்தது, மைதானம், வட்டம், உருண்டது, வெட்டினான், பலகை, கல், மலை, வந்தது

பெயர்ச்சொற்கள்	வினைச்சொற்கள்

- **சரியான வினைச்சொல்லை தெரிந்து எழுதுக.**

ஓடுகிறது, பாடினேன், ஆடினாள், சிரித்தோம், அழுதாள், எழுதுகிறார்கள், செய்தார், விளையாடுகிறார்கள்

1. விமானத்தில் பயணம் …….
2. வண்டி வேகமாக ……..
3. நான் பாட்டுப் ……..
4. நாங்கள் சேர்ந்து …….
5. சிறுவர்கள் மைதானத்தில் …….
6. மாணவர்கள் பரீட்சை ……..

www.lkedu.lk

- **கீழே உள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.**

1. ஆடு குழை தின்னும்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

2. ரமணன் கணினி வாங்கினான்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

3. பாத்திமா புத்தகம் வாசித்தாள்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

4. மேரி சிறுகதை எழுதினாள்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

5. நான் குருவியைப் பார்த்தேன்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

6. குமணன் புத்தகம் வாங்கினான்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

7. நான் காந்தனைப் பார்த்தேன்.
   எழுவாய் : .....
   பயனிலை : .....
   செயப்படுபொருள் : .....

www.lkedu.lk

- **கீழுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான எழுவாய் அடைமொழிகளையும், பயனிலை அடைமொழிகளையும் எழுதுங்கள்.**

1. …… வண்டு தேனை …….. குடித்தது.
2. …….. கோழி தானியங்களை …….. தின்றது.
3. …… காற்று …….. வீசியது.
4. ……. நாய் …….. ஓடியது.
5. …… யானை …… நடந்தது.
6. …….. மரம் …… விழுந்தது.
7. …….. சிறுமி …… ஆடினாள்.
8. …… பேருந்து …….. வந்தது.
9. ……. மனிதன் ……. விழுந்தான்.
10. …… பூக்கள் …… மணம் வீசின.

- **கீழுள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய் அடைமொழிகளையும், பயனிலை அடைமொழிகளையும் இனங்கண்டு எழுதுக.**

1. அழகான மான் விரைந்து ஓடியது.
   ……
   ……
2. கறுப்புப் பூனை பாலை மெதுவாக குடித்தது.
   ……
   ……
3. வெள்ளைப் பசு வேகமாக ஓடியது.
   ……
   ……
4. நீண்ட புகையிரதம் வேகமாக சென்றது.
   ……
   ……..
5. வயதான பெண்மணி பசியால் வாடினாள்.
   ……
   ……
6. கரிய யானை விரைந்து வந்தது.
   ……
   ……

www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- **பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழிகள் என்பவற்றை எழுதுக.**

1. பச்சைக் கிளி கனிந்த பழத்தைக் கொத்தித் தின்றது.
   எழுவாய் : ..... எழுவாய் அடைமொழி : .....
   பயனிலை : ..... பயனிலை அடைமொழி : .....
   செயப்படுபொருள் : .....
   செயப்படுபொருள் அடைமொழி : .....

2. சிறிய பிள்ளை அழகிய பட்டத்தை விரைவாகச் செய்தான்.
   எழுவாய் : ..... எழுவாய் அடைமொழி : .....
   பயனிலை : ..... பயனிலை அடைமொழி : .....
   செயப்படுபொருள் : .....
   செயப்படுபொருள் அடைமொழி : .....

3. கரிய வண்டுகள் இனிய தேனை உறிஞ்சிக் குடித்தன.
   எழுவாய் : ..... எழுவாய் அடைமொழி : .....
   பயனிலை : ..... பயனிலை அடைமொழி : .....
   செயப்படுபொருள் : .....
   செயப்படுபொருள் அடைமொழி : .....

4. வண்ண மயில் அழகிய தோகையை விரித்து ஆடியது.
   எழுவாய் : ..... எழுவாய் அடைமொழி : .....
   பயனிலை : ..... பயனிலை அடைமொழி : .....
   செயப்படுபொருள் : .....
   செயப்படுபொருள் அடைமொழி : .....

5. நெடிய மனிதன் பெரிய மரத்தை வேகமாய் வெட்டினான்.
   எழுவாய் : ..... எழுவாய் அடைமொழி : .....
   பயனிலை : ..... பயனிலை அடைமொழி : .....
   செயப்படுபொருள் : .....
   செயப்படுபொருள் அடைமொழி : .....

www.ikedu.lk

உயிர்க்குறிகள்

உயிர்க்குறிகள்	பெயர்	உதாரணம்
ா	அரவு	காகம், பாடசாலை
ி	விசிறி	கிளி
ீ	விசிறியும் சுழியும்	மீன்
ெ	ஒற்றைக்கொம்பு	வெள்ளை
ே	இரட்டைக் கொம்பு	சேவல்
ை	சங்கிலிக்கொம்பு	சைக்கிள்
ெ..ா	ஒற்றைக்கொம்பும் அரவும்	கொக்கு
ே...ா	இரட்டைக்கொம்பும் அரவும்	கோலம்
ி	கீழ்கால்	சுத்தம்
ூ	கீழ்காலும் சுழியும்	பூனை

www.kedu.lk

நிறுத்தக்குறிகள்

01. முற்றுப்புள்ளி - (.)
02. காற்புள்ளி - (,)
03. வினாக்குறி - (?)
04. வியப்புக்குறி - (!)
05. மேற்கோட்குறி - (“..”)

01. முற்றுப்புள்ளி (.)

வாக்கிய **முடிவைக்** காட்டுவது **முற்றுப்புள்ளி** ஆகும்.

எடுத்துக்காட்டு :

1. காலையில் சூரியன் உதித்தது.
2. மாலா ஓவியம் வரைந்தாள்.
3. குமார் மைதானத்தில் விளையாடினான்.
4. புறவைகள் வானில் பறக்கின்றன.
5. இ.மி.ச (இலங்கை மின்சார சபை)

வாசிக்கும் போது ஒவ்வொரு வாக்கியமும் நிறுத்தத்துடன் படிக்கப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும் முற்றுப்புள்ளி அமைகின்றது.

02. காற்புள்ளி (,)

சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கடுக்காகவோ பிரிக்கும் போது **காற்புள்ளி** இடல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.
2. குமார், பாபு, கமல் ஆகியோர் இணைபிரியாத நண்பர்கள்.
3. பிரதான வீதி, இரத்தினபுரி.
4. அன்புள்ள நண்பா,

www.ikedu.lk

www.teachmore.lk

03. வினாக்குறி (?)

ஒரு வாக்கியம் **வினா வாக்கியமாக** இருப்பின் அவ்வாக்கியத்தின் இறுதியில் **வினாக்குறி** இடப்படல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. **மாமா வந்தாரா?**
2. **நீங்கள் சாப்பிட்டீர்களா?**
3. **உனது பெயர் என்ன?**
4. **எமது நாட்டில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?**

04. வியப்புக்குறி (!)

இது **உணர்ச்சிக்குறி, ஆச்சரியக்குறி** என்றும் அழைக்கப்படும்.

இக்குறியானது,

வியப்பு, மகிழ்ச்சி, அதிர்ச்சி, இரக்கம், அச்சம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில் இடப்படும்.

எடுத்துக்காட்டு :

1. **எவ்வளவு பெரிய சிலை! (வியப்பு)**
2. **நாம் எதிர்ப்பார்த்ததை விடக் கண்காட்சி சிறப்பாக நடந்து முடிந்தது! (மகிழ்ச்சி)**
3. **அவன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது! (அதிர்ச்சி)**
4. **ஆயிரக்கணக்கான வீடுகள் சூறாவளியால் தரைமட்டமாகி விட்டன! (இரக்கம்)**
5. **உற்பத்திப் பொருட்கள் இன்மையால் தொழிற்சாலை மூடப்பட்டுவிடுமோ! (அச்சம்)**

05. மேற்கோட்குறி (“....”)

ஒருவர் கூறிய சொற்கள், வாக்கியங்களை அவர் கூறியவாறே எடுத்தாளும் போது **இரட்டை மேற்கோட்குறி** இடப்படல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. **“அறம் செய விரும்பு” என்றார் ஔவைப்பாட்டி.**
2. **ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து “நிமிர்ந்து நில்லுங்கள்” எனக் கூறினார்.**

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பழமொழிகளும் கருத்துக்களும்

ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் பயன்பாட்டில் இருந்து வரும் அனுபவக்குறிப்புகள் **பழமொழி** ஆகும். கருத்தொன்றைப் பிறருக்கு எளிமையாகப் புரியும்படி நுண்மையாகவும், தெளிவாகவும், இனிமையாகவும், சுருக்கமாகவும் கூறப் **பழமொழி** உதவுகிறது.

தரம் - 03

- **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
  (உள்ளத்தின் வெளிப்பாடு.)

- **அழுதபிள்ளை பால் குடிக்கும்.**
  (முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.)

- **ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.**
  (கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.)

- **ஆனைக்கும் அடி சறுக்கும்.**
  (பெரியோரும் தவறலாம்.)

- **ஆழமறியாது காலை விடாதே.**
  (எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.)

www.ikedu.lk

- **இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.**
  (இளவயதுக் கல்வி நிலைத்திருக்கும்.)

- **ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.**
  (ஒற்றுமை உயர்வு தரும்.)

- **கந்தையானாலும் கசக்கிக் கட்டு.**
  (வறுமையிலும் செம்மையாக இருத்தல்)

- **கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.**
  (உறவுகளைச் சேர்ந்திருப்பது நன்மை தரும்.)

- **மின்னுவதெல்லாம் பொன்னல்ல.**
  (கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.)

- **பொறுத்தார் பூமியாள்வார்.**
  (பொறுமை வெற்றியைத் தரும்.)

- **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**
  (நோயின்றி வாழ்வதே பெரிய செல்வம்.)

www.ikeou.lk

தரம் - 04

- **அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.**
  (ஒற்றுமையே பலம்.)

- **அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.**
  (விடாமுயற்சி பலன் தரும்.)

- **ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.**
  (எதையும் அளவோடு செய்தல் வேண்டும்.)

- **உப்பிட்டவரை உள்ளளவும் நினை.**
  (நன்றி மறவேல்.)

- **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
  (இளமையிற் செய்.)

- **ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.**
  (ஒன்றை வைத்து மற்றையதன் இயல்பை அறியலாம்.)

www.ikedu.lk

- **கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.**
  (சிறியதின் மகிமை.)

- **காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.**
  (எல்லோருக்கும் அவரவர் குழந்தைகள் பெறுமதியானவர்கள்.)

- **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.**
  (சந்தர்ப்பத்தைத் தவற விடக் கூடாது.)

- **குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.**
  (மனசாட்சி உறுத்தும்.)

- **சிறு துளி பெருவெள்ளம்.**
  (சேமிப்பின் மகிமை.)

- **சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.**
  (அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.)

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

தரம் - 05

- **மனமுண்டானால் இடமுண்டு.**
  (மனம் விரும்பினால் உதவலாம்.)

- **இளங்கன்று பயமறியாது.**
  (இளமையின் துணிச்சல்)

- **இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.**
  (திருப்திப்படாத மனம்)

- **போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.**
  (மனநிறைவே ஒருவனுக்கு சிறந்த செல்வம்.)

- **சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.**
  (எதையும் குறைவாக மதிப்பிடக் கூடாது.)

- **நிழலின் அருமை வெயிலிற் தெரியும்.**
  (ஒன்றின் அருமை இன்னொரு சமயம் தெரியும்.)

www.ikedu.lk

- **அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.**
  (உத்தம நட்பு)

- **உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.**
  (உலோபங் கூடாது)

- **உப்பில்லாப் பண்டம் குப்பையிலே**
  (சுவையில்லாத உணவினால் பயன் கிடையாது.)

- **ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.**
  (ஒன்றை வைத்து மற்றையதன் இயல்பை அறியலாம்.)

- **குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.**
  (நற்புகள் மங்குவதில்லை.)

- **பழகப் பழகப் பாலும் புளிக்கும்.**
  (பழக்கத்தின் சலிப்புத் தன்மை)

- **தவளையும் தன் வாயாற் கெடும்.**
  (ஒருவன் தன் நடத்தையால் கெடுவான்.)

www.ikeou.lk

- **குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.**
  (உறவினரின் சிறு குற்றங்களைப் பொருட்படுத்தக் கூடாது.)

- **சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.**
  (பயிற்சியின் பயன்)

பயிற்சிகள்

- **கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. அகத்தின் …… முகத்தில் தெரியும்.
2. அழுதபிள்ளை பால் ……
3. …… புத்தி மட்டு.
4. ஆனைக்கும் …… சறுக்கும்.
5. அடம்பன் …… திரண்டால் மிடுக்கு.
6. அடிமேல் …… அடித்தால் அம்மியும் நகரும்.
7. ஒரு பானை …… ஒரு சோறு பதம்.
8. குற்றமுள்ள …… குறு குறுக்கும்.
9. கூடு கண்ட பூனை …… நாடாது.
10. நோயற்ற வாழ்வே …… செல்வம்.
11. இக்கரை …… அக்கரை பச்சை.
12. பழகப் பழகப் …… புளிக்கும்.
13. தவளையும் தன் …… கெடும்.
14. போதும் என்ற …… பொன் செய்யும் மருந்து.
15. அன்பான …… ஆபத்தில் அறியலாம்.
16. …… கல்வி சிலையில் எழுத்து.
17. காற்றுள்ள போதே ……..
18. உப்பில்லாப் பண்டம் ……..

www.ikedu.lk

- **சொற்களை ஒழுங்குபடுத்திப் பழமொழிகள் ஆக்குங்கள்**

1. மட்டு / புத்தி / ஆத்திரகாரனுக்கு

   .....

2. விடாதே / காலை / ஆழமறியாது

   .....

3. எழுத்து / கல்வி / சிலையில் / இளமையிற்

   .....

4. மாட்டுக்கு / அக்கரை / பச்சை / இக்கரை

   .....

5. சிநேகிதனை / அறியலாம் / ஆபத்தில் / அன்பான

   .....

6. போட்டாலும் / அளவறிந்து / ஆற்றிலே / போடு

   .....

7. காரம் / சிறிதானாலும் / கடுகு / பெரிது

   .....

8. நெஞ்சு / குற்றமுள்ள / குறுகுறுக்கும்

   .....

9. உள்ளளவும் / நினை / உப்பிட்டவரை

   .....

10. தன்குஞ்சு / பொன் / குஞ்சு / காக்கைக்கும்

    .....

11. சிறு / துரும்பும் / உதவும் / பல்லுக் / குத்த

    .....

12. சுற்றமில்லை / பார்க்கிற் / குற்றம்

    .....

13. சொத்து / உண்ணா / போகும் / மண்ணாப்

    .....

14. குப்பையிலே / குன்றிமணி / மங்காது / கிடந்தாலும்

    .....

15. உப்பில்லா / குப்பையிலே / பண்டம்

    .....

16. நாப்பழக்கம் / சித்திரமும் / கைப்பழக்கம் / செந்தமிழும்

    .....

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

- **பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை எழுதுக.**

1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

   .....

2. பொறுத்தார் பூமியாள்வார்.

   .....

3. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

   .....

4. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

   .....

5. ஆழமறியாது காலை விடாதே.

   .....

6. சிறு துளி பெறு வெள்ளம்.

   .....

7. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.

   .....

8. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

   .....

9. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

   .....

10. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

    .....

11. உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்.

    .....

12. மனமுண்டால் இடமுண்டு.

    .....

13. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

    .....

14. இளங்கன்று பயமறியாது.

    .....

15. குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை.

    .....

www.lkedu.lk

- **கீழுள்ள கட்டத்தில் சில பழமொழிகள் (11) குழம்பியுள்ளன அவற்றை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள பழமொழிகளாக்குக.**

ஆத்திரக்காரனுக்கு, கசக்கிக், பொறுத்தார், மட்டு, கந்தையானாலும், பூமியாள்வார், புத்தி, கட்டு, நிழலின், மனமுண்டானால், செந்தமிழும், தெரியும், கைப்பழக்கம், வெயிலிற், இடமுண்டு, நாப்பழக்கம், அருமை, சித்திரமும், நினை, கடுகு, தூற்றிக்கொள், பெருவெள்ளம், உப்பிட்டவரை, பெரிது, காற்றுள்ள, சிறிதானாலும், சிறுதுளி, உள்ளளவும், போதே, காரம்.

1. ……
2. ……
3. ……
4. ……
5. ……
6. ……
7. ……
8. ……
9. ……..
10. ……..
11. ……..

- **பின்வரும் பழமொழிகளுக்கு பொருத்தமான கருத்தினை தெரிவு செய்க. (தரம் 05 பாடநூல் பக்கம் 81)**

தீமை செய்தால் தீமை வரும். உடல் வலிமை அவசியம்.

முயற்சி செய்தால் வெற்றி கிட்டும்.

மானத்துடன் வாழ வேண்டும். சிறுவயதுப் பழக்கம் நீங்காது.

1. கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும்.
   ……
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
   ……..

3. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
……..
4. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.
……..
5. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
……

- **பின்வரும் பழமொழிகளின் பொருள்களை விளக்கி ஒவ்வோர் வாக்கியம் அமைக்க.**

1. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
……
……
2. ஆழமறியாது காலை விடாதே.
……
……
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
……
……
4. இளங்கன்று பயமறியாது.
……
……
5. தவளையும் தன் வாயால் கெடும்.
……
……
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
……
……
7. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
……
……
8. சிறு துளி பெருவெள்ளம்.
……
……

www.lkedu.lk

- **பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை இனங்கண்டு அதன் கீழ் கீறிடுக.**

1. ஒருவர் செய்த உதவியை எம் வாழ் நாளில் என்றும் மறத்தல் கூடாது.
   - ஆனைக்கும் அடி சறுக்கும்.
   - உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
   - முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

2. ஒருவர் தமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது.
   - காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
   - பொறுத்தார் பூமியாள்வார்.
   - முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

3. சிறுவயதில் திருத்த முடியாதவற்றை வளர்ந்த பின்னரும் திருத்த முடியாது.
   - விளையும் பயிரை முளையிலே தெரியும்.
   - தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை.
   - ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

4. ஒருவன் செய்கின்ற நன்மை தீமை அவனையே வந்து சேரும்.
   - முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
   - அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்
   - கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

5. ஒற்றுமையே பலம்.
   - இளங்கன்று பயமறியாது.
   - அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
   - ஆழமறியாது காலை விடாதே.

6. எதையும் குறைவாக மதிப்பிடக் கூடாது.
   - மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
   - காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
   - சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

7. ஒன்றை வைத்து மற்றையதன் இயல்பை அறியலாம்.
   - நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
   - ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
   - உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

8. கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.
   - இளங்கன்று பயமறியாது.
   - ஆனைக்கும் அடி சறுக்கும்.
   - ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு.

9. நற்புகழ் மங்குவதில்லை.
   - சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
   - குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.
   - குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை.

10. எதையும் அளவோடு செய்தல் வேண்டும்.
   - ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
   - ஆழமறியாமல் காலை விடாதே.
   - காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

11. "ராகவன் நல்ல கெட்டிக்கார சிறுவன். திடீரென ஏற்பட்ட விபத்துக் காரணமாக சில நாட்கள் பாடசாலை செல்லவில்லை. இருந்த போதும் நன்றாக முயற்சி செய்து கற்று பரீட்சையில் முதலிடம் பெற்றான்." ராகவனின் செயலை விளக்கப் பொருத்தமான பழமொழி?
   - இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
   - அழுத பிள்ளை பால் குடிக்கும்.
   - அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

12. "தாரிணி நல்ல புத்திசாலிப் பிள்ளை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் போலியானவற்றையும் பெறுமதியானவை என்று ஏமாந்து விடுவாள்." அவளின் இச்செயலைக் குறிக்கப் பொருத்தமான பழமொழி?
   - போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
   - உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்.
   - மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

www.lkedu.lk

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

லகர, ளகர, ழகர வேறுபாடு

தரம் - 04

❖ உலவு – உலவுதல்
❖ உழவு – பயிர்த்தொழில்

❖ கலை – வித்தை / ஆண்மாண்
❖ களை – நீக்கு / பயன்படாத வேற்றுப்பயிர்

❖ தலை – சிரசு (உடல் உறுப்பு)
❖ தழை – தாவரமொன்றின் இலை

❖ வேலை – தொழில்
❖ வேளை – பொழுது

❖ நீலம் - ஒரு நிறம்
❖ நீளம் - அளவைக் குறிக்கிறது

❖ புலி – ஒரு மிருகம்
❖ புளி – கறிக்குப் பயன்படுவது

❖ வலை – மீன் பிடிக்கும் வலை
❖ வளை – புற்று

❖ வாளை – ஒரு வகை மீன்
❖ வாழை – ஒரு மரம்

www.lkedu.lk

தரம் - 05

❖ அல்லி – அல்லி மலர்
❖ அள்ளி – எடுத்தல்

❖ பாலை – நிலம்,மரம்
❖ பாளை – தென்னம்பாளை

❖ தோல் - சருமம்
❖ தோள் - புயம்

❖ வலம் - வலப்பக்கம்
❖ வளம் - செழிப்பு

❖ பாலம் - ஆற்றுப்பாலம்
❖ பாளம் - துண்டு

❖ வால் - உறுப்பு
❖ வாள் - ஆயுதம்
❖ வாழ் - வாழ்தல்

❖ அலை – நிரை
❖ அளை - வளை, புற்று
❖ அழை - கூப்பிடு

❖ இலை – தாவர இலை
❖ இளை - இளைத்தல்
❖ இழை - நூல்

❖ கலி – துன்பம்
❖ களி – மகிழ்
❖ கழி – கழித்தல்

❖ வலி – நோவு
❖ வளி – காற்று
❖ வழி – பாதை

www.lkedu.lk

ரகர, றகர வேறுபாடு

தரம் - 04

❖ அரி – அரித்தல்
❖ அறி - தெரி, உணர்

❖ அருகு – விளிம்பு
❖ அறுகு – ஒரு புல்

❖ இரக்கம் - மனவுருக்கம்
❖ இறக்கம் - இறங்குகை,சரிவு

❖ ஊரி – ஒருவகைச் சங்கு
❖ ஊறி – கசிந்து

❖ கூரியது - கூர்மையுள்ளது
❖ கூறியது - கூறப்பட்டது

❖ தெரி – தெரிந்தெடு
❖ தெறி – துளித் துளியாக விசிறுதல், பொத்தான்

❖ பரி – குதிரை
❖ பறி – பிடுங்குதல்

❖ பொரி - வறு, தானியப்பொரி
❖ பொறி – செதுக்கு, தீப்பொறி, எலிப்பொறி

தரம் - 05

❖ உரி – உரித்தல்
❖ உறி - தூக்கு

❖ உரை – பேச்சு, உரைத்தல்
❖ உறை - கூடு, உறைத்தல்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

❖ கீரி – பிராணி
❖ கீறி – பிளந்து

❖ எரி – நெருப்பு
❖ எறி – எறிதல்

❖ எரிப்பு – தீயால் எரித்தல்
❖ எறிப்பு – பிரகாசம், வெயில், எறித்தல்

❖ குரவர் - பெரியோர்
❖ குறவர் - மலை வாழ் மக்கள்

❖ திரை – திரைச்சீலை
❖ திறை – வரி

❖ கோரை – புல்
❖ கோறை – ஓட்டை, பழுது

❖ மரை – ஒரு வகை விலங்கு
❖ மறை – வேதம், மறைத்தல்

❖ துரவு – கிணறு
❖ துறவு – துறத்தல்

னகர, ணகர வேறுபாடு

தரம் - 04

❖ கனி – பழத்தைக் குறிக்கும்
❖ கணி – கணித்தல்

❖ கனை – கனைத்தல்
❖ கணை – ஓர் ஆயுதம் (அம்பு)

www.lkedu.lk

❖ தன்மை – குணம், மூவிடப் பெயர்களில் ஒன்று
❖ தண்மை – குளிர்மை

❖ தினை – ஒரு தானியம்
❖ திணை - சாதி, ஒழுக்கம்

❖ பன் - ஒருவகைப் புல்
❖ பண் - பாடலுக்குரிய இராகம்

❖ பேன் - தலைப்பேன்
❖ பேண் - காப்பாற்று

தரம் - 05

❖ தனி – தனிமையைக் குறிக்கும்
❖ தணி – தணித்தல், குறைத்தல்

❖ நான் - தன்மைப் பெயர்
❖ நாண் - கயிறு

❖ கனம் - பாரம்
❖ கணம் - கூட்டம், பொழுது

❖ கோன் - அரசன்
❖ கோண் - வளைவு

❖ மன் - அரசன்
❖ மண் - பாறை சிதைந்து உருவாவது

❖ பானம் - பருகுபவை
❖ பாணம் - அம்பு

www.lkedu.lk

ஒத்தகருத்துச் சொற்கள்

தரம் - 04

- அழகு - வடிவு, வனப்பு
- அறிவு – ஞானம், புத்தி
- உடல் - மெய், சரீரம்
- உண்மை – சத்தியம், வாய்மை
- களிப்பு - உவகை, மகிழ்ச்சி
- சினம் - கோபம், சீற்றம்
- சுத்தம் - தூய்மை, புனிதம்
- துன்பம் - துக்கம், இடர்
- நித்திரை – துயில், உறக்கம்
- உணவு – ஆகாரம்,உண்டி

தரம் - 05

- கூடு – அடைப்பு, பறவைக்கூடு
- குறி – அடையாளம், இலக்கு
- உரம் – ஆபரணம், இகழ்ச்சி
- படை - சேனை, அடுக்கு
- மதி – சந்திரன், அறிவு
- முடி – கிரீடம், குடுமி
- வடு – குற்றம், தழும்பு
- வாகை – வெற்றி, ஒரு மரம்
- உறுதி – சத்தியம், வலிமை

www.lkedu.lk

எதிர்க்கருத்துச் சொற்கள்

தரம் - 04

- அண்மை - சேய்மை
- ஆக்கம் - அழிவு
- இலாபம் - நட்டம்
- இளமை - முதுமை
- உயர்வு – தாழ்வு
- உறவு – பகை
- ஏற்றுமதி - இறக்குமதி
- ஒளி - இருள்
- சாதகம் - பாதகம்
- ஞாபகம் - மறதி
- நண்பன் - பகைவன்
- சுத்தம் - அசுத்தம்

தரம் - 05

- முன் - பின்
- அகம் - புறம்
- உண்டு - இல்லை
- பெருமை – சிறுமை
- புதுமை – பழைமை
- இம்மை – மறுமை
- இன்சொல் - வன்சொல்
- உதயம் - மறைவு
- ஐக்கியம் - பிளவு
- ஆதி – அந்தம்
- தண்ணீர் - வெந்நீர்
- நீதி - அநீதி

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

எதிர்ப்பாற் சொற்கள்

தரம் - 05

சிறியவன்	சிறியவள்
பூட்டன்	பூட்டி
பேரரசர்	பேரரசி
பாக்கியவான்	பாக்கியவதி
நிபுணன்	நிபுணி
மூத்தவன்	மூத்தவள்
நம்பி	நங்கை
பெரியப்பா	பெரியம்மா
புத்திரன்	புத்திரி
முதல்வன்	முதல்வி
குணவான்	குணவதி
புண்ணியவான்	புண்ணியவதி

தரம் - 04

சிறுவன்	சிறுமி
செல்வன்	செல்வி
சேவகன்	சேவகி
தம்பி	தங்கை
புத்திரன்	புத்திரி
நண்பன்	நண்பி
பண்டிதன்	பண்டிதை
சீமான்	சீமாட்டி
நாயகன்	நாயகி
மாணவன்	மாணவி
வீரன்	வீராங்கனை
மருமகன்	மருமகள்

www.ikeau.lk

மரபுப் பெயர்கள்

- தொனி மரபுப் பெயர்கள்

சிங்கம்	கர்ச்சிக்கும்
தேனி	ரீங்காரமிடும்
குருவி	கீச்சிடும்
கோழி	கொக்கரிக்கம்
காகம்	கரையும்
ஆடு	கத்தம்
புறா	குறுகுறுக்கம்
கரடி	உறுமும்
கழுதை	கத்தும்
நரி	ஊளையிடும்
நாய்	குரைக்கும்
சேவல்	கூவும்
மயில்	அகவும்
வண்டு	இரையும்

- இலை மரபுப் பெயர்கள்

தென்னை	ஓலை
பனை	ஓலை
நெல்	தாள்
புல்	தாள்
வாழை	இலை
மா	இலை

www.ikeru.lk

- ஆண் - பெண் மரபுப் பெயர்

உயிரினம்	ஆண்	பெண்
ஆடு	கடா	மறி
மாடு	ஏறு, காளை, எருது	நாகு, பசு
கோழி	சேவல்	பேடு, பெட்டை
நாய்	கடுவன்	பெட்டை
யானை	களிறு	பிடி
குரங்கு	கடுவன்	மந்தி
பூனை	கடுவன்	பெட்டை
மான்	கலை	பிணை
குதிரை	குண்டு	வடவை, பெட்டை
மயில்	போத்து	அளகு
நண்டு	அலவன்	பெட்டை

- இளமைப் பெயர்கள் (தாவரங்கள்)

பயிர்	நாற்று
வேம்பு	கன்று
தென்னை	கன்று, பிள்ளை
பலா	கன்று
நெல்	நாற்று
எழுமிச்சை	கன்று
மூங்கில்	கன்று
பனை	வடலி
மா	கன்று
வாழை	குட்டி

www.ikeduk

- **இளமைப் பெயர்கள் (மிருகங்கள்)**

தவளை	**குஞ்சு, பேத்தை**
புலி	**குட்டி**
யானை	**கன்று, போதகம்**
எருமை	**கன்று**
அணில்	**குஞ்சு, பிள்ளை**
ஆடு	**குட்டி**
கீரி	**பிள்ளை**
காகம்	**குஞ்சு**
கோழி	**குஞ்சு**
பாம்பு	**குட்டி**

மரபுச் சொற்களும் கருத்துக்களும்

01.**ஆறப் போடுதல்** - பிற்போடுதல், காலந்தாழ்த்துதல்
02.**ஆழம் பார்த்தல்** - ஒருவரது அறிவு, செல்வம் முதலியவற்றை அளவிடுதல்
03.**கண் திறத்தல்** - அறிவு உண்டாதல்
04.**கங்கணங்கட்டுதல்** - ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்
05.**கதை வளர்த்தல்** - பேச்சை விரித்தல்
06.**கை தூக்குதல்** - துன்பத்திலிருந்து காப்பாற்றல்
07.**தலை கவிழ்தல்** - வெட்கமடைதல்
08.**தட்டிக் கழித்தல்** - சாக்குப் போக்கு சொல்லுதல்
09.**தாளம் போடுதல்** - பிறரை மகிழ்விக்க அவர் கருத்தப்படி நடத்தல்
10.**நாக்குப் புரளுதல்** - சொன்ன சொல் தவறுதல்
11.**நட்டாற்றில் விடல்** - ஆபத்து வேளையில் கைவிடல்
12.**பூசி மெழுகுதல்** - குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
13.**முன்னுக்கு வருதல்** - உயர்ச்சியடைதல்
14.**வாயூறுதல்** - ஆசைப்படுதல்
15.**தட்டிக் கொடுத்தல்** - உற்சாகப்படுத்துதல்

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

தொடர்மொழிக்கு ஒரு மொழி

01.அகர வரிசைப்படி பொருள் கூறும் நூல் - **அகராதி**
02.முனிவர்கள் வசிக்கும் இடம் - **ஆச்சிரமம்**
03.வீண் செலவு செய்பவன் - **ஊதாரி**
04.நம்ப முடியாத கதை - **கட்டுக்கதை**
05.தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - **வேட்பாளர்**
06.ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் - **சகபாடி**
07.மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் - **சுயநலவாதி**
08.ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - **சகோதரர்**
09.தன்னைப் பற்றி தானே எழுதும் சரிதை – **சுயசரிதை**
10.தெருக்கள் கூடுமிடம் - **சந்தி, சதுக்கம்**

தரம் - 05

01.ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் - **அட்டாவதானி**
02.கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவதற்கு முன் சரி, பிழை பார்த்து திருத்தும் நிகழ்வு - **ஒத்திகை**
03.பகையரசருக்கு கொடுக்கப்படும் திறைப் பொருள் - **கப்பம்**
04.ஒன்று போல் இருக்கும் மற்றொன்று - **போலி**
05.ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன் - **சதாவதானி**
06.வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்து கொள்ளும் மருந்து - **கைம்மருந்து**
07.எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் - **தீர்க்கதரிசி**
08.அறிஞர்கள் வாதிடும் களம் - **பட்டிமன்றம்**
09.ஒன்றைப் போல பிரதியெடுத்தல் - **படியெடுத்தல்**
10.ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை - **பதிப்புரை**
11.இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை - **பன்னசாலை**
12.புதிதாகச் செய்த கப்பல் தேர் என்பவற்றை முதன் முதலாகச் செலுத்திப் பார்த்தல் - **வெள்ளோட்டம்**

www.ikedu.lk

13.ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து - **மஞ்சரி**

14.நூலாசிரியர் ஒருவர் தாமியற்றிய நூலின் முன்னே தனது நூலைப் பற்றிக் கூறும் உரை - **முன்னுரை**

விழாக்கள்

01.இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா – **வெள்ளி விழா**

02.ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா – **பொன் விழா**

03.அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா – **வைர விழா / மணி விழா**

04.எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா – **பவள விழா**

05.நூறாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா - **நூற்றாண்டு விழா**

சுருக்கக் குறியீடுகள்

- ✓ **மு.ப – முற்பகல்**
- ✓ **பி.ப – பிற்பகல்**
- ✓ **பி.கு – பிற்குறிப்பு**
- ✓ **கி.மு – கிறிஸ்துவுக்கு முன்பு**
- ✓ **கி.பி – கிறிஸ்துவுக்கு பின்பு**
- ✓ **இ.ம.வ - இலங்கை மத்திய வங்கி**
- ✓ **இ.மி.ச - இலங்கை மின்சார சபை**
- ✓ **இ.ஒ.கூ - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
- ✓ **இ.ரூ.கூ - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்**
- ✓ **இ.பெ.கூ - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

www.lkedu.lk

அறிவித்தல்

சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன **அறிவித்தல்களாகும்.**

அறிவித்தல் 1

கண்ட கண்ட இடங்களில் நெகிழிகளை (பிளாஸ்ரிக்) வீச வேண்டாம்.

- கொழும்பு மாநகர சபை

அறிவித்தல் 2

முதலாந் தவணைக்கான பரீட்சைக் கட்டணங்களை எதிர்வரும் திங்கட் கிழமைக்கு முன்னர் செலுத்தவும்.

- வகுப்பாசிரியர்

அறிவித்தல் 3

கட்டுரைப் போட்டிக்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் நாளை முற்பகல் 10.00 மணியளவில் பிரதான மண்டபத்திற்கு வருகை தரவும்.

- அதிபர்

அறிவித்தல் 4

நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களை போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு இல்லப் பொறுப்பாசிரியர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

- விளையாட்டுப் போட்டி அறிவிப்பாளர்

அறிவித்தல் 5

மாணவர் மன்றக் கூட்டம் அடுத்த மாதம் முதலாவது வெள்ளிக்கிழமை பி.ப.1.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

- மன்றப் பொறுப்பாசிரியர்

அறிவித்தல் 6

கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும்.

www.lkedu.lk

அறிவித்தல் 7

வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.

அறிவித்தல் 8

பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி என்பவற்றைப் பார்த்து வாங்கவும்.

அறிவித்தல் 9

பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அறிவித்தல் 10

வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

அறிவித்தல் 11

கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விசேட அறிவித்தல்

நீர் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளைக் காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரை நீர் வெட்டு அமுலில் இருக்கும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. பொதுமக்கள் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

www.ikeau.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

அறிவுறுத்தல்

குறிப்பிட்ட குழுவினரை முன்னிறுத்தி அவர்கள் பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்காக கூறப்படுவது **அறிவுறுத்தல்** ஆகும்.

நித்திரை கொள்ளும் போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.

வீதியைக் கடக்கும் போது வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் பார்த்து மீண்டும் வலப்பக்கமாகப் பார்த்து வெள்ளைக் கோட்டினூடாக வேகமாகக் கடக்க வேண்டும்.

விசேட வைத்திய நிபுணரைச் சந்திக்க விரும்புவோர் காலை ஏழு மணிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.

தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்பு படுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

உருக்கோலத்திலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சோடிச் சொற்களுக்கு உரிய பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

குறிப்பு – பரீட்சை வினாப்பத்திரங்களில் வரக்கூடிய அனைத்துத் தலைப்புகளும் அறிவுறுத்தல்களாகவே காணப்படும்.

www.lkedu.lk

கட்டளை

கட்டாயம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தில் அமைவது **கட்டளை** ஆகும்.

உணவு உண்ட பின்னர் பீங்கான் கோப்பை போன்றவற்றை இடது புறத்தில் உள்ள தட்டில் வையுங்கள்.

பல்துலக்கிய பின்னர் பற் தூரிகையைப் பற் தூரிகைப் பெட்டிக்குள்வையுங்கள்.

கீழ்த்தட்டில் உள்ள பெட்டியிலிருந்து நீலநிறப் பந்தை எடுத்து வாருங்கள்.

மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் ஆகியவற்றை இடது புறத்திலுள்ள தட்டில் வையுங்கள்.

இரண்டாவது மாடியில் உள்ள பொருட்களை மூன்றாம் மாடியில் உள்ள அறைக்குக் கொண்டு செல்லுங்கள்.

நூலகத்திற்குள் செல்லும் முன்னர் உங்களது பாதணிகளைக் கழற்றி உரிய இடத்தில் வைத்துவிட்டுச் செல்லுங்கள்.

மேல் தட்டில் உள்ள பெட்டியிலிருந்து மஞ்சள் நிறப் பலூன்களை எடுத்து வாருங்கள்.

www.ikeou.lk

சேர்த்தெழுதுதல்

01.வாழை + பழம் = வாழைப்பழம்
02.பால் + குடம் = பாற்குடம்
03.மரம் + வேர் = மரவேர்
04.மா + காய் = மாங்காய்
05.பூ + சோலை = பூஞ்சோலை
06.பழம் + வகை = பழவகை
07.பனை + வேர் = பனைவேர்
08.மா + இலை = மாவிலை
09.பூ + அரும்பு = பூவரும்பு
10.மண் + குடம் = மட்குடம்
11.பால் + சோறு = பாற்சோறு
12.பொன் + காசு = பொற்காசு

01.நெல் + வயல் = நெல்வயல்
02.பல் + பொடி = பற்பொடி
03.மலை + உச்சி = மலையுச்சி
04.முள் + செடி = முட்செடி
05.தமிழ் + சொல் = தமிழ்ச்சொல்
06.மண் + குடம் = மட்குடம்
07.பூ + கொடி = பூங்கொடி
08.பனை + காய் = பனங்காய்
09.தெற்கு + திசை = தென்திசை
10.தெங்கு + காய் = தேங்காய்
11.வடக்கு + மேற்கு = வடமேற்கு
12.காடு + அரசன் = காட்டரசன்
13.கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்
14.புது + பானை = புதுப்பானை
15.ஒன்று + ஊர் = ஒருர்
16.ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
17.மூன்று + மூன்று = மும்மூன்று
18.மலர் + செண்டு = மலர்ச்செண்டு
19.தேயிலை + நீர் = தேநீர்
20.தேன் + நீர் = தேனீர்

www.ikedu.lk

பிரித்தெழுதுதல்

01.வடகிழக்கு = வடக்கு + கிழக்கு
02.கப்பற்கூலி = கப்பல் + கூலி
03.பச்சைக்களி = பச்சை + கிளி
04.மனமாற்றம் = மனம் + மாற்றம்
05.தேன்மொழி = தேன் + மொழி
06.வாழைக்காய் = வாழை + காய்
07.பசுக்கன்று = பசு + கன்று
08.காவியுடை = காவி + உடை
09.பதினேழு = பத்து + ஏழு
10.நானூறு = நான்கு + நூறு
11.ஆற்றுமலை = ஆறு + மலை
12.வெந்நீர் = வெம்மை + நீர்
13.அடிச்சுவடு = அடி + சுவடு
14.நற்செய்தி = நன்மை + செய்தி
15.ஐவைந்து = ஐந்து + ஐந்து
16.குரங்குக்குட்டி = குரங்கு + குட்டி
17.தேங்குழல் = தேன் + குழல்
18.பொற்றகடு = பொன் + தகடு
19.பச்சிலை = பச்சை + இலை
20.மரக்கொம்பு = மரம் + கொம்பு

முந்நூறு = மூன்று + நூறு

முன்னூறு = முன்பு + நூறு

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பயிற்சி 01

கட்டத்திலுள்ள எழுத்துக்களைக் கொண்டு சொற்களைப் பூரணப்படுத்துக.

ன	ண	ல	ள	ழ	ர	ற

1. நூ….கம்
2. உ…..வகம்
3. கி….ங்கு
4. உ…..க்கம்
5. பள்….ம்
6. உ…..வன்
7. இ….க்கம்
8. விமா….ம்
9. ப….வைகள்
10. க….ங்கள்

பயிற்சி 02

அடைப்புக்குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒளியைப் பரப்புவது …… (விளக்கு / விலக்கு)
2. நீடூழி காலம் …….. (வாள்க / வாழ்க)
3. ஆழம் …… காலை விடாதே. (அரியாமல் / அறியாமல்)
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த …….. ஆகும். (பனி / பணி)
5. …… செய விரும்பு. (அரம் / அறம்)

பயிற்சி 03

பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. புறா பறந்து சென்றது.
   ……..
2. நட்சத்திரம் வானில் மின்னியது.
   ……..
3. தாமரைப் பூ மலர்ந்தது.
   ……
4. குதிரை வேகமாக ஓடியது.
   ……..

பயிற்சி 04

www.lkedu.lk

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. **'சமுத்திரம்'** என்பதன் ஒத்த கருத்து சொல் யாது?
   .....
2. **'அண்மை'** என்பதன் எதிர் கருத்து சொல்லை எழுதுக.
   .....
3. **'புத்திரன்'** என்பதன் எதிர்பாற் சொல்லை எழுதுக.
   .....
4. **'உவகை'** என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
   .....
5. **'சேவகி'** என்பதன் எதிர்பாற் சொல்லை எழுதுக.
   .....
6. **'இளமை'** என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.
   .....

பயிற்சி 05

பின்வரும் வாக்கியங்களை எதிர்பால் வாக்கியங்களாக மாற்றுக.

1. எனது **தங்கை** பாட்டுப் பாடினாள்.
   .....
2. அவரது **மருமகள்** வெளிநாட்டில் வசிக்கின்றார்.
   .....
3. நான் **நண்பனின்** வீட்டிற்குச் சென்றேன்.
   .....
4. விடுமுறைக்கு **மாமா** வீட்டிற்குச் செல்வேன்.
   .....
5. **சிறுவன்** மைதானத்தில் விளையாடினான்.
   .....
6. ஓட்ட **வீரன்** முதலாவதாக ஓடினான்.
   .....
7. **நாயகன்** அழகாக நடித்தான்.
   .....

www.lkedu.lk

பயிற்சி 06

கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

அதிபர், டொல்பின், மாணவர்கள், மான்

1. ஓநாயைக் கண்ட ..... வேகமாக ஓடியது.
2. ..... வரிசையாகச் சென்றனர்.
3. எம் இருவரையும் ..... அழைத்தார்.
4. ..... நன்றியுள்ள பிராணியாகும்.

பயிற்சி 07

வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் ..... (மலர்ந்தது **/** மலர்ந்தன)
2. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் ..... (சென்றேன் **/** சென்றோம்)
3. கழிவு நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் ..... (பெருகுகின்றது **/** பெருகுகின்றன)
4. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் ..... (போன்றது **/** போன்றன)

பயிற்சி 08

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. 'நண்பர்கள்' உயர்திணை ஒருமை பெயர்ச்சொல்லாகும் .....
2. 'புத்தகம்' அ.்றிணை ஒருமை பெயர்ச்சொல்லாகும் .....

www.lkedu.lk

பயிற்சி 09

பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து மீண்டும் எழுதுக.

1. கொக்கு .....
2. குடை .....
3. தாமரை .....
4. தொப்பி .....
5. பென்சில் .....

பயிற்சி 10

கீழே தரப்பட்ட இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றுக.

1. நான் ஒரு கவிதை எழுதினேன்.
   .....
2. புறாக்கள் பறந்து சென்றன.
   .....
3. அவர்கள் வயலில் வேலை செய்தனர்.
   .....
4. நாங்கள் பூந்தோட்டத்திற்குச் சென்றோம்.
   .....
5. நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்.
   .....

பயிற்சி 11

கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியங்களை இறந்தகால வாக்கியங்களாக மாற்றுக.

1. நான் அழகிய காட்சிகளை வரைவேன்.
   .....
2. நான் நூலகத்திற்குச் செல்வேன்.
   .....

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

3. நாங்கள் சந்தைக்குச் செல்வோம்.
   ……
4. நாங்கள் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடுவோம்.
   ……
5. மாமி எங்களைப் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.
   ……

பயிற்சி 12


பின்வரும் காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

www.ikedu.lk

பயிற்சி 01

கட்டத்திலுள்ள சொற்களைக் கொண்டு பந்தியை நிரப்புக.

பருப்பு, வகைகளில், மாச்சத்து, அரிசி, உடலுக்கு, உணவாக

உலகத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் முக்கிய 1……... அமைந்தவை தானிய உணவு வகைகளே. அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானிய வகைகள் உணவாகக் கொள்ளப்படுகின்றன. தானிய உணவில் பொதுவாக 2…… இருக்கின்றது. இது உணவு 3…… முக்கியமானதாகும். 4…….. நமது நாட்டு மக்களின் முக்கிய உணவாகும். தானிய உணவிற்கு அடுத்தபடியாக 5……. வகைகள் நமது உணவில் முக்கிய இடம் வகிக்கின்றன. பருப்புகளும் பயறுகளும் தசைகளுக்கு பலம் தந்து 6…… உரமளிக்கின்றன.

பயிற்சி 02

கட்டத்திலுள்ள இணைமொழிகளைக் கொண்டு வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

வாடி வதங்கி, நகமும் சதையும், அல்லும் பகலும், ஓடி ஆடி

1. விவசாயிகள் …… வேலை செய்கின்றனர்.
2. அவர்கள் …… போல் வாழ்ந்தார்கள்.
3. வயலில் பெண்கள் …… வேலை செய்தனர்.
4. சந்தையில் காய்கறிகள் ……க் காணப்பட்டன.

பயிற்சி 03

பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
   ……..
2. சிறு துளி பெரு வெள்ளம்.
   ……

3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
   ……..
4. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
   ……..

பயிற்சி 04

பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. நம்ப முடியாத கதை : ……
2. வீண் செலவு செய்பவன் : ……..
3. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : …….
4. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் : ……..

பயிற்சி 05

அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

கணீர் கணீர், மடமட, குடுகுடு, கலகல, கமகம

1. பாட்டி …… என்று நடந்தார்.
2. ஆலய மணி …….. என்று ஒலித்தது.
3. எனது தங்கை …… என்று சிரித்தாள்.
4. அவன் இளநீரை …… என்று குடித்தான்.

பயிற்சி 06

கீழே தரப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகளுக்கான விரிவினை எழுதுக.

1. மு.ப : ……..
2. கி.பி : ……
3. பி.கு : ……...
4. இ.ம.வ : ……
5. கி.பி : ……..

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பயிற்சி 07

பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. பால் + சோறு = ...
2. மா + காய் = ...
3. பழம் + வகை = ...
4. மண் + குடம் = ...
5. வாழை + குலை = ...

பயிற்சி 08

பின்வரும் உரையாடலில் இடம்பெறவேண்டிய நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் இடுக.

தாத்தா : ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்

பேரன் : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா

தாத்தா : காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால் ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்

பேரன் : ஏன் தாத்தா

தாத்தா : சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள் இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்

பயிற்சி 09

பின்வரும் தகவல்களை வாசியுங்கள்

சங்கரனுக்கு ஒன்பது வயதாகின்றது. அவன் பிறந்த இடம் கண்டி. அவனது அப்பாவின் பெயர் சிவராமன். சங்கரன், பூங்குன்றம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கின்றான். வகுப்பாசிரியரின் பெயர் க.தாமரைச்செல்வி. முத்திரை சேகரிப்பது அவனது பொழுதுபோக்காகும். அவன் **எனது வீட்டுத்தோட்டம்** என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து போட்டிக்கு அனுப்பவுள்ளான்.

www.ikedu.lk

உங்களை சங்கரனாகக் கருதிக்கொண்டு சித்திரப்போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

சித்திரப்போட்டி விண்ணப்பப்படிவம்

1. சித்திரத்தின் தலைப்பு : .....
2. மாணவர் முழுப்பெயர் : .....
3. பிறந்த இடம் : .....
4. கற்கும் பாடசாலை : .....
5. கற்கும் வகுப்பு : .....
6. வகுப்பாசிரியர் பெயர் : .....

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.

.....
மாணவர் கையொப்பம்

பயிற்சி 10

பின்வரும் காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.



1. .....
   .....

www.lkedu.lk

2. ……
……
3. ……
……



1. ……
……
2. ……
……
3. ……
……



1. ……
……
2. ……
……
3. ……
……

www.lkedu.lk

பயிற்சி 01

பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. (……..)
2. மான்கூட்டம் சிதறி ஓடியன. (……)
3. ஒவ்வொரு புத்தகமும் நல்லது. (……)
4. தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை. (……..)

பயிறசி 02

சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1.	தொழிலாழி	தொளிலாளி	தொழிலாளி	தொளிலாழி
2.	முயர்ச்சி	முயச்சி	முயற்ச்சி	முயற்சி
3.	ஆராச்சி	ஆராய்ச்சி	ஆராட்சி	ஆராய்சி
4.	நட்ச்சத்திரம்	நட்சத்திரம்	நச்சத்திரம்	நட்சத்திரம்

பயிற்சி 03

பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டு பிடித்து அச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. மை, பேனா, மலர், புத்தகம், பென்சில் (……)
2. பாடகன், அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் (……)
3. மயில், குருவி, மரை, குயில், காகம் (……..)
4. மரம், மான், வேர், கிளை, தண்டு (……)

பயிற்சி 04

பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1. உனக்குச் சிலந்தியைப் பற்றித் தெரியுமா
2. ஐயோ வழுக்கி விட்டதே
3. ஐயா உங்களுக்கு நீச்சல் தெரியுமா
4. ஐயோ எனக்கு நீச்சல் தெரியாதே

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

பயிற்சி 05

பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. ஆட்டுக் .....
2. கீரிப் .....
3. குதிரைக் .....
4. புலிக் .....
5. அணிற் .....
6. நாய்க் .....
7. மான் .....
8. குரங்குக் .....

பயிற்சி 06

பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

மெதுவாக, தெளிவாக, அமைதியாக, நகைச்சுவையாக, சரியாக

1. அவர் ..... நடந்து வைத்தியசாலைக்குச் சென்றார்.
2. தாத்தா எதுவும் பேசாமல் ..... இருந்தார்.
3. நாம் எப்போதும் சொற்களைச் ..... உச்சரிக்க வேண்டும்.
4. அப்பா, எந்த முடிவை எடுத்தாலும் அது ..... இருக்கும்.

பயிற்சி 07

பின்வரும் பிராணிகளின் ஒலிகளை கட்டங்களுக்குள் எழுதுக.

பிராணிகள்	ஒலிகள்	பிராணிகள்	ஒலிகள்
மயில்		காகம்	
ஆந்தை		நரி	
யானை		சிங்கம்	

www.ikedu.lk

பயிற்சி 08

பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது அங்கு வேறு எவரும் வந்திருக்கவில்லை. புத்தகப் பையை மேசை மீது வைத்துவிட்டு அவன் துடைப்பத்தை எடுத்து வகுப்பைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். அதன் பின்னர் வந்த பீற்றர் அவனுக்கு உதவி செய்தான். அடுத்ததாக வந்த சாந்தி பூச்சாடியில் இருந்த பூக்களை அகற்றி விட்டு புதிய பூக்களைச் செருகினாள். அதன் பின்னர் வந்த கரீம் மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்தான்.

1. மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது வகுப்பில் இருந்தவர் யார்? 1. சாந்தி 2. கரீம் 3. பீற்றர் 4. ஒருவருமில்லை

2. வகுப்பைச் சுத்தம் செய்தவர் யார்?
   1. பீற்றர் 2. சாந்தி 3. மாதவன் 4. கரீம்

3. வகுப்பைச் சுத்தம் செய்வதற்கு உதவியவர் யார்?
   1. சாந்தி 2. பீற்றர் 3. கரீம் 4. ஒருவருமில்லை

4. பூச்சாடியை ஒழுங்கு செய்தவர் யார்?
   1. சாந்தி 2. மாதவன் 3. பீற்றர் 4. கரீம்

மேலே தரப்பட்ட பந்தியை மீண்டும் வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தியவர் யார்?
   .....
2. முதலில் வந்தவர் யார்?
   .....
3. அடுத்ததாக வந்தவர் யார்?
   .....
4. கடைசியாக வந்தவர் யார்?
   .....

பயிற்சி 09

www.ikedu.lk

கீழே தரப்பட்டுள்ள சொற்களின் எழுத்துக்கள் மாறியுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி சரியான சொல்லை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. பாதிய புதை : .....
2. உலை மச்சி : .....
3. மொய் தாழி : .....
4. வெயல் வளி : .....
5. குன் மாட்டி : .....
6. வீர் நீழ்ச்சி : .....
7. ஆடல் கமை : .....
8. காடி கரம் : .....
9. மனை பரம் : .....
10. மமரை தாலர் : .....

பயிற்சி 10

கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. நேற்று மலை பெய்தது.
   .....
2. மிளகாய்ச் செடி செளித்து வளர்ந்தது.
   .....
3. நான் மனல் வீடு கட்டினேன்.
   .....
4. அது நல்ல யோசனை என்று நினைத்தார்.
   .....

பயிற்சி 11

பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.


1. அரசன், மந்திரி, அரசி, தம்பி, தங்கை
2. தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை
3. உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்
4. மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி
5. சிறுவன், புதல்வன், புதல்வி, புத்திரன், புத்திரி

பயிற்சி 12

குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகளைக் கண்டு பிடித்து எழுதுக.

www.lkedu.lk

குறுக்கெழுத்துப் போட்டி



இடமிருந்து வலம்

1.இவற்றுக்கு இறகுகள் உள்ளன.
4.வீட்டினுள்ளே வெளிச்சத்தையும் காற்றையும் தருவதாகச் சுவரிலே வைத்துக் கட்டப்படுவது.
5.வாரத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள்.
6.சோற்றுடன் சேர்த்து உண்ணுவது.
7.கைது செய்யப்பட்டவர்.
8.பூக்களில் இது தேனைக் குடிக்கும்.

மேலிருந்து கீழ்

1.அன்றாட செய்திகளை வாசித்து அறிய உதவுவது.
2.உலகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
3.உணவை மெனறு உண்ண உதவுவது.
6.இதனால் நாம் பார்க்கிறோம்.

பயிற்சி 13

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பின்வரும் காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.




1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……



1. ……
   ……..
2. ……
   ……..
3. ……
   ……

www.ikedu.lk



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

பயிற்சி 14

“நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்” நூல்கள் வாசிப்பின் பயன்கள் என்னும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

www.lkedu.lk

பயிற்சி 15

பின்வரும் கவிதைகளின் இடைவெளிகளை நிரப்புக.

- ஓரிடத்தில் இருந்திடாமல்
  …….. கேட்டிடலாம்
  பாடகரைப் பார்த்திடாமல்
  ……. கேட்டிடலாம்.

- வாத்தியங்கள் இசைத்திடாமல்
  ……. கேட்டிடலாம்
  ஊரெங்கும் போய் வராமல்
  ……. கேட்டிடலாம்.

- குடைபிடித்து …….
  புத்தகமும் கொண்டு
  …….. நடந்து வரும்
  குழந்தைகளே கேளீர்.

- கண்மணிகாள் ……..
  காலில் வரும் கவனம்
  கண்ணுறக்க மில்லாமற்
  ……. நேரும்.

- ஒரு மரமேனும் நான் நட்டு – என்
  ……. போல பேணிடுவேன்
  ஒரு வர்க் கேனும் சிறு உதவி – நான்
  ……. செய்திடுவேன்.

- படிப்பறி வில்லா மாந்தர்க்கு – என்
  படிப்பால் …….. புரிந்திடுவேன்!
  துடிக்கும் …….. துயர் துடைக்க – நான்
  தூங்கா திருந்து ……..

நன்றி – தரம் 04 தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி.

www.lkedu.lk

பயிற்சி 01

ஒலி வேறுபாட்டுப் பயிற்சிகள்

(லகர, ளகர, ழகர வேறுபாடு)

- **கீறிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தினால் நிரப்பி, வாசித்து, அவ்வாக்கியங்களை எழுதுக.**

1. கு....ந்தைகள் நி....க்காட்சியைக் கண்டுக் க....த்தனர்.
2. அப்பெரிய மரத்தின் கி.....கள் கு....ர் நி... ...ப் பரப்பின.
3. ம.... பெய்யும் கா....ங்களில் ஆற்றில் வெ... ...ம் பெருகி ஓடும்.
4. நா..... மா.....யில் நாம் கண்டிக்குச் செ... ... வேண்டும்.
5. மெ...குவர்த்தியின் வெ...ச்சத்தினால் இரு... வி...கியது.

(னகர, ணகர, நகர வேறுபாடு)

- **கீறிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தினால் நிரப்பி, வாசித்து, அவ்வாக்கியங்களை எழுதுக.**

1. மீ....கள் த... ...ரிலுள்ள அழுக்குகளைத் தி...று சுத்தப்படுத்துகின்றது.
2. நான் அதனைக் க... ...ற்றபோது க... ...ர் விட்டுக் கதறினேன்.
3. இ...றைய உலகில் ம...தர்கள் அ....வரும் ப....ம் சம்பாதிக்கவே விரும்புகின்றனர்.
4. பெரியவர்கள் ம...தைப் பு....படுத்தாமல் பேசுதல் வே....டும்.
5. வைத்தியசாலையில் .....யாளிகள் பருக வெ... ...ர் கொடுக்கப்பட்டது.

(ரகர, றகர வேறுபாடு)

- **கீறிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தினால் நிரப்பி, வாசித்து, அவ்வாக்கியங்களை எழுதுக.**

1. நோயற்... வாழ்வுக்கு ம...க்க... உணவே சி...ந்தது.
2. இன்.....ய சி...வர்கள் நாளைய பி...சைகள் என்று கூ....ப்படுவதுண்டு.
3. கட....க.....யில் சிலர் க...ப்பந்தாட்டத்திலும் சிலர் கா...பந்தாட்டத்திலும் ஈடுபட்டனர்.

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

4. அவரது அருமையையும் பெருமையையும் அவரின் ம...ணத்தின் பின்னரே அ...ய முடிந்தது.
5. வ...சையில் நிற்குமா... மாணவர்கள் அ...வுறுத்தப்பட்டனர்.

- **கட்டத்திலுள்ள எழுத்தக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துங்கள்.**

ன	ண	ல	ள	ழ	ர	ற

1. நூ....கம்
2. உ....வகம்
3. கி....ங்கு
4. உ....க்கம்
5. பள்...ம்
6. உ....வன்
7. இ...க்கம்
8. விமா....ம்
9. ப...வைகள்
10. க...ங்கள்

- **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க**

1. சூரியனது ..... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது. (ஒளி, ஒலி, ஒழி)
2. பாடசாலையின் முதலாவது மணி ..... சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. (ஒளி, ஒலி, ஒழி)
3. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி .....ந்தன. (ஒளி, ஒலி, ஒழி)

www.lkedu.lk

4. காடுகளை .....ப்பதால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அலி, அளி, அழி)
5. இந்தப் பூமியைச் சுற்றி ..... மண்டலம் உள்ளது. (வலி, வளி, வழி)
6. சில குழந்தைகளுக்க அடிக்கடி ..... (வலி, வளி, வழி) உண்டாவது வழக்கம்.
7. சுற்றுலாப் பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் ..... (வலி, வளி, வழி) எதுவெனக் கேட்டார்.
8. உணவு உண்ட பின்னர் சிறிது நேரம் ..... (உலவு, உளவு, உழவு)
9. ..... (உலவு, உளவு, உழவு) பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான்.
10. ..... (உலவு, உளவு, உழவு) தொழிலுக்கு ஒப்பானதாக வேறெதுவும் இவ்வுலகில் இல்லை.

- **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க**

1. ..... மப்பும் மந்தாரமுமாய் இருண்டு காணப்பட்டது. (வாணம், வானம்)
2. சுதந்திர தின விழாவின் போது ..... வேடிக்கைகள் காணப்பட்டன. (வான, வாண)
3. அவன் எய்த ..... பட்டு மான் கீழே விழுந்தது. (பானம், பாணம்)
4. மோகன் தாகந் தீரக் குளிர் ..... குடித்தான். (பானம், பாணம்)
5. ..... உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கின்றான். (ஊன், ஊண்)
6. நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர்வாழ வேண்டுமானால் ..... (ஊன், ஊண்) உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
7. மலைநாட்டில் ..... (பனி, பணி) மூடியிருந்தமையால் கடுங் குளிராக இருந்தது.

8. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ……. (வேலை, வேளை) நிறுத்தம் செய்தனர்.
9. "தந்தை, தாய் ……." (பேன், பேண்) என்பது நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு முதுமொழி ஆகும்.
10. தலையில் ……. (பேன், பேண்) மிகுந்தமையால் அடிக்கடி தலையைச் சொறிய வேண்டியுள்ளது.

- **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க**

1. ஆற்றங் ……யில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. (கரை, கறை)
2. உடையில் இருந்த இரத்தக் …….. அவன் செய்த குற்றத்தைக் காட்டிக் கொடுத்தது. (கரை, கறை)
3. அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து ……. (இரங்கினர், இறங்கினர்)
4. அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும் ……. (இரங்கினர், இறங்கினர்)
5. காகம் அங்குமிங்கும் ……. தேடியது. (இரை, இறை)
6. மழை வெள்ளம் எங்கும் …….. (பரந்து, பறந்து) பாய்ந்தது.
7. சிறுவர் கடற்கரையில் …….. (ஊரி, ஊறி) களைப் பொறுக்கி விளையாடினர்.
8. அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் ……. (ஊரி, ஊறி)க் கொண்டே இருந்தது.
9. நல்லக் கருத்துக்களை ……. (அரிய, அறிய) ஆர்வம் வேண்டும்.
10. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ……. (அரிய, அறிய) காரியம் ஆகும்.

www.ikedu.lk

பயிற்சி 02

- **பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. புறா பறந்து சென்றது.
   ……..
2. நட்சத்திரம் வானில் மின்னியது.
   ……..
3. தாமரைப் பூ மலர்ந்தது.
   ……..
4. குதிரை வேகமாக ஓடியது.
   ……..

பயிற்சி 03

- **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ‘மதி’ என்பதன் ஒத்தகருத்து சொல்லை எழுதுக.
   ……..
2. ‘பெருமை’ என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.
   ……..
3. ‘செல்வன்’ என்பதன் எதிரப்பாற் சொல்லை எழுதுக.
   ……..
4. ‘ஏர்’ என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
   ……..
5. ‘மருத்துவன்’ என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.
   ……..
6. ‘இன்சொல்’ என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.
   ……..

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பயிற்சி 04

- **அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. நான் (வந்தேன் / வந்தோம்)
2. நாம் (படிக்கிறேன் / படிக்கிறோம்)
3. நாங்கள் (ஓடுவோம் / ஓடுவீர்)
4. நீ (பார்த்தாய் / பார்த்தீர்)
5. நீங்கள் (செய்கிறாய் / செய்கிறீர்கள்)
6. சிறுவன் (கூறினான் / கூறினார்)
7. சிறுமி (கழுவினாள் / கழுவினார்)
8. மாணவர் (விளையாடினான் / விளையாடினர்)
9. யானை (எழுந்தது / எழுந்தன)
10. கைகள் (உயர்ந்தது / உயர்ந்தன)

பயிற்சி 05

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1. 'வைத்தியர்' உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
2. 'வாகனங்கள்' அ.·.றிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
3. 'ஆசிரியர்கள்' உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
4. 'கடிகாரம்' அ.·.றிணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
5. 'மலர்கள்' உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
6. 'விசிறிகள்' அ.·.றிணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
7. 'மீனவர்கள்' உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
8. 'மரங்கள்' உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (.....)
9. 'ஓடுவான்' உயர்திணை இறந்தகால வினைச்சொல்லாகும். (.....)
10. 'புத்தகம்' அ.·.றிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (.....)

www.lkedu.lk

பயிற்சி 06

- **வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. மரங்கள் சரிந்து …… (விழுந்தது, விழுந்தன)
2. சூரியன் காலையில் …….. (உதித்தது, உதித்தன)
3. அந்திவானம் செந்நிறமாகக் …… (காணப்பட்டது, காணப்பட்டன)
4. சேவல் அதிகாலையில் …… (கூவின, கூவியது)
5. அணில் மாமரத்தில் …… (ஏறின, ஏறியது)

பயிற்சி 07

- **பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து எழுதுக.**

(உதாரணம்) - எழுதினான் - விரைவாக எழுதினான்

1. ஓடினான் ……
2. பாடினான் ……
3. வரைந்தாள் ……
4. பேசினாள் ……..
5. சென்றான் ……..
6. எழுதினாள் ……
7. இறங்கினாள் ……
8. ஆடினாள் ……
9. உண்டது ……..
10. வந்தது ……
11. வாசித்தான் ……
12. நீந்தும் ……..
13. சமைத்தாள் ……
14. வருவான் ……

www.lkedu.lk

பயிற்சி 08

- **கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை எதிர்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் புல்லாங்குழலின் இசையைக் கேட்டேன்.
   .....
2. பறவைகள் தோட்டத்திற்கு வந்தன.
   .....
3. தொழிலாளர்கள் தோட்டத்தில் வேலை செய்தனர்.
   .....
4. நாங்கள் கண்டிக்குச் சென்றோம்.
   .....
5. நான் வங்கிக்குச் சென்றேன்.
   .....

- **கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் அழகிய காட்சிகளை இரசிப்பேன்.
   .....
2. நான் மாலையில் விளையாடுவேன்.
   .....
3. நாங்கள் பழங்களை விரும்பி உண்போம்.
   .....
4. நாங்கள் பூந்தோட்டத்திற்குச் செல்வோம்.
   .....
5. அப்பா எங்களைப் பேருந்து நிலையத்திலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.
   .....
   .....

www.lkedu.lk

- **அடைப்புக்குறிக்குள் உள்ள பொருத்தமற்ற சொல்லை எழுதுக.**

1. (மான், மான்கள்) ஓடியது. - .....
2. (வீடு, வீடுகள்) இருந்தன. - .....
3. (குயில், குயில்கள்) கூவின - .....
4. (சில்லு, சில்லுகள்) உருண்டது. - .....
5. (கால், கால்கள்) முறிந்தது - .....
6. (தேனீ, தேனீக்கள்) மொய்த்தன. - .....
7. (கத்தரி, கத்தரிகள்) பூத்தது. - .....
8. (வாள், வாள்கள்) அறுந்தன. - .....
9. (பல், பற்கள்) விழுந்தது. - .....
10. (பந்து, பந்துகள்) விழுந்தன. - .....

பயிற்சி 09

- **ரேகா எழுதிய ஐந்து வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன.**

1. நான் காலையில் பாடசாலை சென்றேன்.
2. பாடசாலைக்கு அருகே பிரியா என்னுடன் சேர்ந்து கொண்டாள்.
3. நாங்கள் இருவரும் வகுப்பிற்குச் சென்றோம்.
4. ஆசிரியை எங்கள் இருவரையும் அழைத்தார்.
5. பிள்ளைகள் வகுப்பைக் கூட்டினார்கள்.

- **ரேகா எழுதியதை நாளை செய்யவுள்ளதாகக் கொள்க. அதற்கேற்ப வாக்கியங்களை மாற்றி எழுதுக. (எதிர்காலத்தில்)**

1. நான் நாளை .....
2. .....
   .....
3. .....
4. .....
5. பிள்ளைகள் நாளை .....

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

பயிற்சி 10

- **கட்டத்திலுள்ள சொற்களைக் கொண்டு பின்வரும் பந்தியை பூர்த்தி செய்க.**

வரலாறாக, நண்பர்கள், தலைமுறை, வாழ்க்கை, நமக்குத்

ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23 ஆந் திகதியை உலக புத்தக தினமாக அறிவித்துள்ளது. 1..... தேவையானவற்றுள் முக்கியமானதொன்று புத்தகமாகும். நல்ல நூல்களே உற்ற 2..... மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும் 3..... முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால் மனிதனின் வாழ்க்கை மட்டும்தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த 4..... வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை 5..... நூல்களில் பதிவு செய்வதன் காரணத்தால் அது சாத்தியமாகின்றது.

- **கட்டத்திலுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிரப்புக.**

வேகமாக, சரியாக, குன்றும்குழியும், மெதுவாக, ஊரெங்கும்

1. அவன் ..... நடந்து வீட்டிற்கு சென்றான்.
2. அந்தச் செய்தி ..... பரவியது.
3. கிராமத்திலுள்ள பல வீதிகள் ..... ஆகக் காணப்படுகின்றன.
4. நாம் எப்போதும் சொற்களைச் ..... உச்சரிக்க வேண்டும்.
5. காலிலே முள் குத்தியதால் அவளால் ..... நடக்க முடியவில்லை.

www.ikedu.lk

பயிற்சி 11

- **பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**

1. மனமுண்டானால் இடமுண்டு.
   .....
2. இளங்கன்று பயமறியாது.
   .....
3. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
   .....
4. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
   .....

- **பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

1. அறிஞர் வாதிடும் களம். : .....
2. ஒன்றைப்போல் இருக்கும் மற்றொன்று : .....
3. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை :
   .....
4. ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து :
   .....
5. தெருக்கள் கூடும் இடம் : .....

- **கீழே தரப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகளுக்கான விரிவினை எழுதுக.**

1. இ.ம.வ. : .....
2. இ.ஒ.கூ : .....
3. இ.மி.ச : .....
4. இ.பெ.கூ : .....
5. இ.போ.ச : .....

www.lkedu.lk

பயிற்சி 12

- **கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிரப்புக.**

கணீர்கணீர், குசுகுசு, குடுகுடு, சலசல, கமகம

1. தாத்தா ..... என்று நடந்தார்.
2. மல்லிகையின் வாசம் ..... என்று பரவியது.
3. ஆற்று நீர் ..... என்று ஓடியது.
4. நண்பர்கள் தமக்குள் ..... என்று பேசினர்.

- **பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

1. மரம் + வேர் : .....
2. முள் + கொடி : .....
3. பூ + கொடி : .....
4. ஓர் + ஊர் : .....
5. தெற்கு + திசை : .....

- **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. தேநீர் : .....
2. தேனீர் : .....
3. நாணூறு : .....
4. வெந்நீர் : .....
5. வடகிழக்கு : .....

www.lkedu.lk

www.teachmore.lk

www.teachmore.lk

பயிற்சி 13

- **பின்வரும் உரையாடலில் இடம்பெற வேண்டிய நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் இடுக.**

கீதா : தொலைக்காட்சியை தொடர்ந்து பார்க்கக் கூடா

அஸ்ரா : ஏன் என்று சொல்லவில்லையே

கீதா : கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும்

அஸ்ரா : விட்டுவிட்டுப் பார்த்தால் பாதிப்பு ஏற்படாதுதானே

கீதா : ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் மட்டும் பார்ப்பதால் அதிகம் பாதிப்புக் கிடையாது என்று வைத்தியர்கள் கூறுகிறார்களாம்

மாலா : அவர்கள் சொன்னால் சரியாக இருக்கும்

அஸ்ரா : சிறுவர்கள் தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்தால் என்ன நடக்கும்

மேரி : சிந்திக்கும் திறன் குறைந்து விடுமாம்

அஸ்ரா : அப்படியா

- **பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. அவர் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்
2. இதனால் யாருக்கு லாபம்
3. அரசே நம் பூமிக்கு வேண்டிய சக்தியெல்லாம் சூரியனிடம் இருந்துதான் கிடைக்கிறது
4. பொறுமையாக இருக்க ஏது அவகாசம்
5. எனக்கு நீலம் பச்சை நிறப் பலூன்கள் வேண்டும்
6. எந்த எண் எனக்கு ஒன்றும் புரியவில்லையே என்று சற்றுக் குழப்பத்துடன் கேட்டான்

www.teachmore.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.teachmore.lkType your text

பயிற்சி 14

- **பிழையாக எழுதப்பட்டள்ள பின்வரும் சொற்களைச் சரியாக எழுதுக.**

1. கடைமை, பிடைவை - ……, ……..
2. கட்டிடம், ஏழ்ம்மை - ……, ……..
3. சமையல், நாகரீகம் - ……, ……
4. தலகணை, பழமை - ……, ……..
5. சமையம், பறைவை - ……, ……

- **பின்வரும் ஒவ்வொரு வரியிலும் உள்ள சொற்களுள் அவற்றுடன் தொடர்பில்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. பூனை, நாய், எலி, குதிரை, கிளி
2. கை, கால், பாதம், தொப்பி, தலை
3. தோசை, அப்பம், பாண், பிட்டு, கிழங்கு
4. சிவப்பு, நீலம், மகிழ்ச்சி, பச்சை, கறுப்பு
5. மாமன், மருமகன், தகப்பன், மகன், மகள்

- **பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

வாக்கியம்	எண்	இடம்	காலம்
நான் வருவேன்.			
நாங்கள் வருவோம்.			
நீ வருவாய்.			
நீங்கள் வருவீர்கள்.			
அவன் வருவான்.			
அவள் வருவாள்.			
அவர் வருவார்.			
அவர்கள் வருவார்கள்.			
அது வருகிறது.			
அவை வரும்.			

www.lkedu.lk

பயிற்சி 15

- **பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. நாங்கள் வனப்பகுதிக்குக் கால்நடையாகச் சென்றோம். (……..)
2. பறவைகள் கூட்டமாகப் பறந்தது. (……)
3. ஒவ்வொரு பூக்களும் அழகானது. (……)
4. கிராமியப் பாடல்கள் கிராமிய உணர்வை தருகின்றன. (……)

- **பின்வரும் வினாக்களில் உள்ள கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. காலைக்கு மாலை என்பது போல பிறப்புக்கு ……
   1.வாழ்க்கை 2.இறப்பு 3.முயற்சி 4.படிப்பு

2. தாகத்திற்கு தண்ணீர் போல நோய்க்கு …….
   1.மருந்து 2.விருந்து 3.தண்ணீர் 4.சோறு

3. எழுத்தாணிக்கு ஏடு போல வெண்கட்டிக்கு ……..
   1.வெண்பலகை 2.கற்பலகை 3.கரும்பலகை 4.சுண்ணம்

4. சித்திரைக்கு வைகாசி போல வியாழனுக்கு …….
   1.நாள் 2.சனி 3.கிழமை 4.வெள்ளி

5. துக்கத்திற்கு கறுப்பு என்பது போல சமாதானத்திற்கு ……..
   1.நீலம் 2.வெள்ளை 3.சிவப்பு 4.பச்சை

- **பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

1. பேரும்…… 5. ஒட்டும்……..
2. மூலை…… 6. மலையும்……
3. குன்றும்…… 7. குப்பை……
4. நீட்டி…… 8. அருமை……

www.ikeou.lk

- **பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டு பிடித்து அச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. ஆடல், விலகுதல், நடித்தல், சிரித்தல், பாடல் (……..)
2. நடத்தல், போதல், துள்ளுதல், துயிலுதல், ஓடுதல் (……)
3. தாமரை, முல்லை, மல்லிகை, செவ்வந்தி, கீரை (……)
4. அலை, கடல், சந்திரன், கப்பல், நீர் (……)
5. ஆறு, குளம், குட்டை, கேணி, வாவி (……..)

- **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. சின்னத் தம்பி ஓடி ஆடி விளையாடினான். இந்த வாக்கியத்தில் வரும் பெயர்ச்சொல் யாது?
   1.ஓடி 2.விளையாடினான் 3.தம்பி 4.சின்ன

2. 'ஓடினான்' என்ற வினைச் சொல்லின் பன்மைச் சொல் யாது?
   1.ஓடியது 2.ஓடினார்கள் 3.ஓடுவான் 4.ஓடவில்லை

3. எனது தம்பியும் தங்கையும் நூலகம் சென்றார்கள். இவ்வாக்கியத்தில் வரும் வினைச்சொல் யாது?
   1.எனது 2.நூலகம் 3.சென்றார்கள் 4.தம்பியும் தங்கையும்

4. சிவசங்கரி மிகவும் இனிமையாகப் பாடுவாள். இவ்வாக்கியத்தின் எழுவாய் யாது?
   1.இனிமை 2.சிவசங்கரி 3.மிகவும் 4.பாடுவாள்

5. நான் இந்தக் காட்டில் வாழ்கிறேன். இவ்வாக்கியத்தின் பயனிலை யாது?
   1.நான் 2.வாழ்கிறேன் 3.காட்டில் 4.இந்த

6. கருமையான குயில் இனிமையாகக் கூவியது. இவ்வாக்கியத்தின் எழுவாய் அடைமொழி யாது?
   1.குயில் 2.கூவியது 3.கருமையான 4.கருமையான குயில்

www.ikeou.lk

- **கீழே தரப்பட்டுள்ள தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. **அவன்** பாட்டுப் பாடினான்.
   1.தன்மைச் சொல் 2.முன்னிலைச் சொல்
   3.படர்க்கைச் சொல் 4.வினைச் சொல்

2. **நீ** வீட்டுக்கு வருவாயா?
   1.முன்னிலைச் சொல் 2.படர்க்கைச் சொல்
   3.தன்மைச் சொல் 4.வினைச் சொல்

3. **நான்** இறைவனை வணங்கினேன்.
   1.படர்க்கைச் சொல் 2.முன்னிலைச் சொல்
   3.தன்மைச் சொல் 4.வினைச் சொல்

4. **சங்கரி** பெண்கள் பாடசாலையில் கல்வி கற்றாள்.
   1.ஆண்பால் 2.பலர்ப்பால் 3.ஒன்றன்பால் 4.பெண்பால்

5. **சிறுவன்** அழுதுகொண்டு நின்றான்.
   1.பெண்பால் 2.ஆண்பால் 3.பலர்ப்பால் 4.பலவின்பால்

6. **கிளிகள்** பறந்து சென்றன.
   1.ஆண்பால் 2.ஒன்றன்பால் 3.பலவின்பால் 4.பலர்ப்பால்

7. **தாதிமார்** வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
   1.பெண்பால் 2.ஆண்பால் 3.பலர்ப்பால் 4.பலவின்பால்

- **பின்வரும் முற்பகுதிகளுக்கேற்ப பிற்பகுதிகளைத் தெரிந்து இணைத்து வாக்கியமாக்கி எழுதுக.**

முற்பகுதி	பிற்பகுதி
1.புத்தகங்களும் பத்திரிகைகளும்	மனம் மாறினாள்.
2.உன்னுடைய வரலாறு	பொங்கியது.
3.சிறுமியர் சிலர்	மேசையிற் கிடந்தன.
4.இராமன் சீதையுடன்	எனக்குத் தெரியாது.
5.கூனியின் பேச்சினால் கைகேயி	அயோத்திக்குச் சென்றான்.
6.அவன் மனதில் ஆனந்தம்	பொம்மை செய்தனர்.

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....

பயிற்சி 16

- **பின்வரும் தகவல்களை வாசித்து கீழுள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யுங்கள்.**

மேரிக்கு பத்து வயதாகின்றது. அவள் பிறந்த இடம் மன்னார். அவளது அப்பாவின் பெயர் பீட்டர். மேரி, செம்பருத்தி தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கின்றாள். வகுப்பாசிரியரின் பெயர் வ.சிவதர்சினி. சித்திரம் வரைவது அவளது பொழுதுபோக்காகும். அவள் "சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதி போட்டிக்கு அனுப்பவுள்ளாள்.

கட்டுரைப்போட்டி விண்ணப்பப்படிவம்

1. கட்டுரையின் தலைப்பு : .....
2. மாணவர் முழுப்பெயர் : .....
3. வயது : .....
4. கற்கும் பாடசாலை : .....
5. கற்கும் வகுப்பு : .....
6. வகுப்பாசிரியரின் பெயர் : .....

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.....

மாணவரது கையொப்பம்

www.lkedu.lk

- **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் கல்வியிற் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக் காப்பது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களைக் கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

1. ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?
   .....
2. "சிறுமை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
   .....
3. "நூல்கள்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
   .....
4. "கவனமாக" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.
   .....
5. தன்மை, பன்மை எதிர்கால வினைச்சொல்லை எழுதுக.
   .....

- **பின்வரும் அறிவித்தலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

அறிவித்தல்

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு விபுலானந்தர் மண்டபத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

-அதிபர்.

1. எப்போது பரிசளிப்பு விழா நடைபெறும்?
   .....
2. எத்தனை மணிக்கு நடைபெறும்? .....
3. எந்த மண்டபத்தில் நடைபெறும்? .....

www.lkedu.lk

- **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின் விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராயச்சி செய்தார். தனது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முறைகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியில் தம் ஆராய்ச்சியில் வெற்றிகண்டார். மின்விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின்விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.

1. யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது?

   .....

2. வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை?

   .....

3. மின்விளக்கு கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது?

   .....

4. பல முறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றி காண உதவியது எது?

   .....

5. மேற்கோளாக அமையும் கூற்று எது?

   .....

6. 'வெற்றி' என்பதன் எதிர்க்கருத்து சொல்லை எழுதுக.

   .....

7. 'அறிவியல்' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

   .....

8. 'ஒன்றரை' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

   .....

www.lkedu.lk

பயிற்சி 17

- **கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்களைக் கொண்டு குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூர்த்தி செய்க.**

குறுக்கெழுத்துப் போட்டி 01

1 வி		2		டு	
	3 பா			4	வி
5			6 கா		
	7	8 கா		ம்	
					9
10		று		11	

மேலிருந்து கீழ்

1.எரி பொருள்களுள் ஒன்று
2.எல்லோருக்கும் முகத்தில் மூக்கு உண்டு. இதற்கு கையில் மூக்கு உண்டு.
4.மயில் என்ன செய்யும்?
6.நமது உடலுக்கு இப்படியொரு பெயருமுண்டு.
8.இது இல்லாத இடமே இல்லை எனலாம்
9.பாதியை இப்படியும் கூறுவர்.

இடமிருந்து வலம்

1.பிள்ளைகளுக்கு விருப்பமான செயல்
3.மண்ணாலாக்கப்பட்ட ஒரு பொருள்
4.உயிருக்கு ஒத்த கருத்துள்ள ஒரு சொல்
5.வெயிலுக்கும் மழைக்கும் உதவும் ஒரு பொருள்
6.விலங்குகளின் உறைவிடம்
7.வானத்தை இப்படியும் அழைப்பர்
10.இன்றைக்கு மறுநாள் நாளை என்பது போல் இன்றைக்கு முதல் நாள்
11.இது கடலின் எல்லையாக அமைகிறது.

www.ikeu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

குறுக்கெழுத்துப் போட்டி 02



மேலிருந்து கீழ்


1.படிப்பதற்கு அவசியமானது
2.இடது பக்கத்தின் எதிர்ப்பக்கம்
3.ஆண் இடம் மாறி இருக்கிறார்
4.ஆலயங்களில் அதிகாலையில் ஒலிப்பது
6.மீன் பிடிப்பதற்கு உதவுவது
7.உடுக்கும் உடை
9.இது இல்லாமல் போனால்தான் சமாதானம் வரும்.
11.கிளையில்லாத ஒரு மரம்.

இடமிருந்து வலம்

1.நாம் பிரயாணம் செய்யும் வாகனங்களுள் ஒன்று
5.முனிவர்கள் இறைவனை வேண்டிச் செய்வது
7.இதனைச் சுவரில் அறைந்து படங்களைத் தொங்கவிடுவர்
8.ஆண் மானைக் குறிப்பது
9.தலை மயிரைக் குறிக்கும் மற்றொரு சொல்
10.பார்ப்பதற்கு அவசியமானது
12.எல்லா உணவுச் சத்துக்களும் நிறைந்த பொருள்

www.lkedu.lk

குறுக்கெழுத்துப் போட்டி 03



இடமிருந்து வலம்

1.அரிசியுடன் கூடவே இருப்பது
3.கிழமையில் மூன்றாவது நாள்
4.யானையின் மறுபெயர்
5.இதுவும் ஒரு உணவு
7.உடலை மறைப்பது
8.இது ஆற வேண்டும்

மேலிருந்து கீழ்

1.இது அதிகமான பெறுமதி உடையது
2.சிரிப்பை அவ்வாறும் கூறலாம்
3.இதற்கு அடிமை ஆகக் கூடாது
6.தலையில் பின்னுவது


www.ikeou.lk

பயிற்சி 18

- **கீழே சம்பவம் ஒன்றின் முதற்பகுதி தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து மிகுதிப் பகுதியை நிறைவு செய்க.**

காகம் ஒன்று மரத்தின் மீது அமரந்து நீண்ட நேரம் கரைந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் காகம் கரையும் ஓசை அதிகமாகக் கேட்கவே சிறுவன் வீட்டில் இருந்து வெளியே வந்தான். காகம் கரையும் திசையை நோக்கிப் பார்த்தான். .....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....


- **கீழுள்ள காட்சிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.**



1. .....
   .....
2. .....
   .....

www.ikedu.lk

3. ……
……



1. ……
……
2. ……
……
3. ……
……



1. ……
……
2. ……
……
3. ……
……

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- கீழுள்ள காட்சிப்படத்தை அவதானித்து ஐந்து வாக்கியங்கள் கொண்ட சிறு கதையினை உருவாக்குக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் ஒன்றுக்கொன்று தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும்.



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……
4. ……
   ……
5. ……
   ……

www.lkedu.lk

www.teachmore.lk

- **"தாவரங்களைப் பாதுகாப்போம்"** என்னும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

- **"மரக்கறி உணவுகளே எமக்கு அதிக சக்தியைக் கொடுப்பன"** என்னும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

www.lkedu.lk

நன்றி – தரம் 05 தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

விதைத்துக்கொண்டே இரு
முளைத்தால் மரம்.
இல்லையேல் உரம்....

www.lkedu.lk

நன்றி